பக்கங்கள் எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 23 செவ்வாய்க்கிழமை 08-09-1992 UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 285

# நாளைய பேரணியுடன் பூரண கடையடைப்பு!

## பொது அமைப்புகள் தீர்மானம்

யாழ்ப்பாணம், செப்டம்பர் 8

வடக்கு — கிழக்கில் இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணத்தை அரசு குறைத்ததைக் கண்டித்து நாளை பூரண ஹர்த்தால் கடையடைப்புடன் பிரமாண்டமான ஆர்ப்பாட்டப் பேரணியும் நடைபெற உள்ளன.

நாளை தேநீர்க் கடைகள், சைக்கிள் கடைகள் தவிர்ந்த ஏனைய சகல வர்த்தக நிலையங்களும், தனியார் அரச நிறுவனங்களும், பாடசாலைகளும் மூடப்பட்டு பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படும்.

அதேவேளை, குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வந்து நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் ஒன்று திரளும் பல்லாயிரக் கணக்கான மக்கள் நீண்ட பேரணியில் செயலகத்துக்குச் செல்வர். அங்கு வைத்து, நிவாரண வெட்டை மறுபரிசீலனை செய்து முன்னரைப்போல

[8 ஆம் பக்கம் பார்க்க]

## படையினர் சூடு!

கடந்த சனியன்று இரவு 10 30 மணியளவில் உணவுப் பொருள்களை இறக்குவதற்காக புங்குடுதீவை... கரையை நோக்கி வந்து கொண்டிருந்த படகு ஒன்றை நோக்கி பூநகரிப் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

அதனால் படகிலிருந்த மூவரில் ஒரு இளைஞர் கடலில் குதித்தார். அதன் பின்னர் காணாமல் போன அந்த இளைஞர் கடந்த ஞாயிறு மாலை பல இன்னல்களின் பின்னர் பாதுகாப்பாக கரையை வந்தடைந்தார்.

## கைப்பற்றிய படகு மூலம் புலிகள் பெரும் நாசம் விளைவிக்கலாம்

### பாதுகாப்பு அதிகாரிகள் அச்சம்

கொழும்பு, செப். 8

இராணுவம் கடற்படை கூட்டுப் பாதுகாப்பின் கீழ் மண்டைதீவு கடற்படை இறங்கு துறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த "வோட்டர் ஜெட்" அதிவேகப்படகு விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டது பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் அஞ்சுகின்றன. புலிகள் இந்தப் படகின் உதவியுடன் பெரும் நாசத்தை ஏற்படுத்தக் கூடும்.

பாதுகாப்பு அதிகாரிகள் மேற்கண்டவாறு தெரிவித்தனர் என்று கொழும்பு தமிழ் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

புலிகளினால் கைப்பற்றப்

[8 ஆம் பக்கம் பார்க்க]

### அரசாங்க சொத்தைத் திருடிய

## 15 விமானப் படையினர் மீது வழக்குத் தொடரப்படும்!

கொழும்பு, செப். 8

25 லட்சம் ரூபா பெறுமதியான அரசாங்கச் சொத்தைத் திருடியது தொடர்பாக பதினைந்து விமானப் படையினர் மீது வழக்குத் தொடருவது குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனையை பொலிஸார் கேட்டுள்ளனர்.

இந்த பதினைந்து பேரில் ஆறு பேர் சிரேஷ்ட அதிகாரிகள் என்று தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பில் 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் அரசுப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மீண்டும் சண்டை ஆரம்பித்த போது வீதிப் போக்குவரத்து அதிகார சபைக்குச் சொந்தமான வாகனங்கள், என்ஜின்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் மட்டக்களப்பு விமானத்தளத்துக்கு அருகில் உள்ள வீதியில் கைவிடப்பட்டிருந்தன என்றும்—

பின்னர் அவை காணாமற் போயிருந்தன என்றும்—

தேடுதலின்போது காணாமற்போன பொருள்களில் சில விமான நிலைய வளவினுள் நிலத்துக்கு அடியில் புதைக்கப்பட்ட நிலையில் கண்டு பிடிக்கப்பட்டன என்றும்—

இன்னும் சில பொருள்கள் கொழும்பு பஞ்சிகாவத்தையில் உதிரிப்பாக விற்பனையாளரிடம் இருந்து கைப்பற்றப்பட்டன என்றும்—

திருடப்பட்ட பொருள்களில் வீதிப் போக்குவரத்து அதிகார

[8 ஆம் பக்கம் பார்க்க]

### சாய்ந்தமருதுச் சம்பவம்

## குண்டு வெடிப்பை அடுத்து 16 தமிழரைக் காணவில்லை

மட்டக்களப்பு, செப். 8

சாய்ந்தமருதுவில் குண்டு வெடித்த தினமான கடந்த செவ்வாய்க்கிழமை காரைதீவு அகதிமுகாமில் இருந்து தொழில் மற்றும் பல்வேறு அலுவல்களின் நிமித்தம் வெளியே சென்ற தமிழர்களில் 16 பேர் இன்னும் முகாம் திரும்பவில்லை.

இந்த 16 பேரும் அம்பாறை, மல்வத்தை, வளத்தாப்பிட்டி ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள்.

கடந்த கால வன்செயல்களை அடுத்து காரைதீவுக்கு அகதிகளாகி வந்து முகாமில் வாழ்ந்து வந்தவர்கள்.

அதே சமயம் குண்டு வெடிப்பு நிகழ்ந்த தினத்தில் காணாமற்போன காரைதீவைச் சேர்ந்த மா. தம்பிராசா (வயது 58) என்பவரது அடையாள அட்டை கல்முனையில் உள்ள தேசிய புலனாய்வுக் குழுவுக்குக் கிடைத்துள்ளது.

தம்பிராசாவுக்கு என்ன நடந்தது என்பது இன்னமும் தெரியவில்லை என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (இ-3)

## அகதிமுகாமில் தொற்று நோய்

யாழ்ப்பாணம், செப். 8

மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரியில் தஞ்சம் அடைந்திருக்கும் அகதிகளுக்கு வயிற்றோட்டம் போன்ற தொற்று நோய்கள் பரவும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுப் பிரதிநிதிகளும், இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் பிரதிநிதிகளும் நேற்று இந்த அகதிமுகாமுக்கு விஜயம் செய்தனர்.

[உ-3-17-30]

## புதிய யாழ். ஆயராக தோமஸ் சௌந்தரநாயகம்

### இன்று அறிவிப்பு வெளியாகும்

குருநகர், செப். 8

அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை யாழ். மறை வட்டத்தின் புதிய ஆயராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இச்செய்தி இன்று நண்பகல் 12 மணிக்கு யாழ். மறைவட்ட மடங்கிலும் உள்ள தேவாலயங்களில் மணி ஒலி எழுப்பிச் சம்பிரதாய முறையில் அறிவிக்கப்படுமென்று தெரிவிக்கப்படுகிறது.

வத்திக்கான் நகரில் இருந்து வெளிவரும் கிறிஸ்தவ உத்தியோகபூர்வ பத்திரிகையிலும் இச்செய்தி இன்று பிரசுரமாகும் என்று அறிவிக்கப்படுகிறது.

அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தற்சமயம் மன்னார் மறைவட்ட ஆயராகப் பணியாற்றி வருகிறார்.

இதேவேளை யாழ். ஆயர் அதிவண. லோதிதி வ. தியோகுப்பிள்ளை ஓய்வு பெறுவதை அடுத்து வெற்றிடமாகும் ஆயர் இடத்தை நிரப்ப, வண. இராயப்பு யோசேப் அடிகளார் ஆயராக உயர்த்தப்படுகிறார். அவர் மன்னார் மறை வட்ட ஆயராக நியமிக்கப்படுவார் என்று தெரியவருகிறது.

இது பற்றிய அறிவிப்பும் மன்னார் மறை வட்டத்தில் உள்ள தேவாலயங்களில் மணி ஒலி எழுப்பி சம்பிரதாய முறைப்படி மக்களுக்கு அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-51]

## பண்டாரவளை நகரில் தமிழர் கடைகள் தீக்கிரை

கொழும்பு, செப். 8

பண்டாரவளை நகரசந்தைக்கு அருகிலுள்ள பத்துக் கடைகள் கடந்த வெள்ளி இரவு தீக்கிரையாகின.

தீக்கிரையான கடைகளில் பெரும்பாலானவை தமிழர்களின் கடைகள் என்று தெரிவிக்கப்படுகிறது.

தீ விபத்துக்கு மின்சார ஒழுக்கா அல்லது விஷமிகளா காரணம் என்பது குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

தீயினால் கடைகளை இழந்தவர்களுக்கு தற்காலிக கடைகளைக் கட்டிக்கொடுக்குமாறு இ. தொ. கா. பொதுச் செயலாளரும், பதுளை மாவட்ட எம். பியுமான திரு. டி. வி. சென்னன் கோரிக்கை விடுத்துள்ளார். [இ]

## ஷெல் வீச்சு!

தென்மராட்சி, செப். 8

நேற்று அதிகாலை 3.30 மணி தொடக்கம் காலை 6.00 மணி வரை ஆனையிறவு முகாமிலிருந்து பளைப் பகுதியை நோக்கி ஷெல் வீச்சு மேற்கொள்ளப்பட்டது.

ஷெல்கள் புதுகாட்டுப் பகுதியிலுள்ள தோட்டங்களிலும் பளையை அண்மித்த பகுதிகளிலும் வீழ்ந்து வெடித்தன. [உ-117]

### ஜனாதிபதித் தேர்தல் ஆட்சேப மனு:

## சிறிமா செலுத்த வேண்டிய செலவு தொகை ரூ.9 லட்சம்

கொழும்பு, செப். 8

அண்மையில் உயர்நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்ட ஜனாதிபதி தேர்தல் ஆட்சேப மனு தொடர்பாக மனுதாரரான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா எதிர் மனுதாரர்களுக்குச் செலுத்த வேண்டிய செலவுத் தொகை 9 லட்சத்து 6 ஆயிரம் ரூபாவாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வழக்கு விசாரணை 527 தினங்கள் நடந்தது. ஜனாதிபதி பிரேமதாஸாவின் ஐக்கிய தேசியக் கட்சி தனது வழக்கறிஞர்கள் வாதாடிய ஒவ்வொரு நாளுக்கும் 2 ஆயிரம் ரூபா வீதம் செலவுத் தொகை தரப்பட வேண்டும் என்று கோரியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் வழக்கறிஞர்கள் 21 தினங்கள் தமது பிரசன்னத்தைக் குறிப்பிட்டுள்ளனர்.

செலவுத் தொகையை செலுத்த பொதுமக்களிடம் இருந்து நிதி திரட்டப்படும் என்று சுதந்திரக்கட்சி எம். பி நிமால் சிறிபால டி சில்வா ஏற்கனவே அறிவித்திருந்தது தெரிந்ததே.

## துர்க்கை அம்மன் தேர் இன்று

யாழ்ப்பாணம், செப். 8

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவில் தேர்த் திருவிழா இன்று காலை 8.30 மணிக்கு பக்தி உணர்வுடன் நடைபெறவுள்ளது.

அதிகாலை 4 30 மணிக்குப் பூசைகள் ஆரம்பமாகி 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும், 8 மணிக்குக் கோபுர வாசல் தரிசனமும் நடைபெற்று, 8 30 மணிக்கு அம்பாள் தேரில் ஏறுவார். தேர்ப்பவனி 9 மணிக்கு ஆரம்பமாகும்.

தேர்த் திருவிழாவையொட்டி விசேட போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. [illegible]

## மன்னிப்புச் சபையின் விசேட குழு இலங்கை வரும்

சர்வதேச மன்னிப்புச் சபையின் விசேட குழு ஒன்று அடுத்த மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவிருப்பதாக தெரிய வருகின்றது.

மூன்றாண்டுகளுக்கு மேலாக விசாரணை ஏதுமின்றி சிறைகளிலும், தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான இளைஞர்களின் நிலை குறித்து நேரில் பார்வையிடவே இக்குழு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-எ)

## மனித உரிமைகள் குழுவும் அக்டோபர் 29இல் விஜயம்

கொழும்பு, செப். 8

ஜெனிவாவைத் தலைமையகமாகக் கொண்ட ஐ.நா. மனித உரிமை ஆணைக்கமிஷனின் செயலாற்றுக் குழு ஒன்று அடுத்த மாதம் 29 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கிறது.

பத்துத் தினங்கள் இந்த நாட்டில் தங்கியிருக்கும் இக்குழுவினர் 1991 ஜனவரியின் பின்னர் காணாமற் போனவர்களைத் தேடிக் கண்டு பிடிக்கும் பணிக்கு உதவுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

காணாமற் போனவர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் அங்கம் வகிக்கும் புதிய அமைப்பு ஒன்றின் செயலாளர் சந்திரா பீரிஸ் இத்தகவலை வெளியிட்டார்.

1991 ஜனவரிக்குப் பின்னர் தென் மாகாணத்தில் 176 பேர் காணாமற் போயுள்ளனர் என்றும் —

கிழக்கு மாகாணம் — மட்டக்களப்பு மாவட்டத்தில் 276 பேர் காணாமற் போயுள்ளனர் என்றும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும் அவர் கூறினார். (த-எ)

வனம் வளர்த்தால்
வானம் நீர் வார்க்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உற்சவங்கள்

தென்மராட்சி, செப். 8

எழுதுமட்டுவாள் ஸ்ரீ வரத மீனாட்சி அம்பாள் ஆலய பிரதிஷ்டா மகா கும்பாபிசேகம் நாளை காலை 6.00 மணிக்கு நடைபெறும்.

★ ★ ★

அமைதி ஏற்பட்டு மக்கள் நிம்மதியாக வாழ வேண்டி இளாலி வித்தக விநாயகர் ஆலயத்தில் நாளை மறுதினம் யாகபூஜை ஒன்று காலை எட்டு மணிமுதல் நடைபெற வுள்ளது.

இதனையொட்டி தென்மராட்சிப் பகுதியிலுள்ள இந்து இளைஞர் சபையினர் இன்று காலை 6 மணி தொடக்கம் பிரார்த்தனை நடாத்தவுள்ளனர். [உ-117]

★ ★ ★

முறிகண்டி, செப். 8

கிளிநொச்சி, கனகபுரம் புனித வேளாங்கண்ணி மாதா திருவிழாவின் நான்காம் நாளான இன்று செவ்வாய்க் கிழமை திருப்பலிப் பூசையும், மரியன்னையின் ஊர்வலமும் நடைபெறவுள்ளன. [அ-97]

## இணுவிலுக்கு மகாஜனா

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி நாளை புதன்கிழமை தொடக்கம் இணுவில் சைவ மாகஜன மகா வித்தியாலயத்தில் மாலை நேரப் பாடசாலையாக இயங்கவுள்ளது. வகுப்புகள் நண்பகல் ஒரு மணிக்கு ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று

சேர் பொன்னம்பலம் இராமநாதன் நினைவுப் பேருரை யாழ். பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும். பொருளியல் பிரிவுத் தலைவர் டாக்டர் எஸ். கே. சண்முகநாதன் நினைவுப் பேருரையை நிகழ்த்துவார்.

அதனைத் தொடர்ந்து மாலை 4 மணிக்கு இராமநாதன் நுண்கலைக் கழக மாணவர் வழங்கும் இசை நிகழ்ச்சி இடம்பெறும். [உ]

## நாளை

யாழ்ப்பாணம், செப். 8

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையும் இணைந்து நடத்தவிருக்கும் தமிழ், ஆங்கில மொழிகளிலான சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர் பயிற்சி நெறி நாளை மாலை 4.00 மணிக்கு செஞ்சிலுவைச் சங்க பயிற்சி நிலையத்தில் ஆரம்பமாக உள்ளது.

யாழ். பல்கலை கழக உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா பிரதம விருந்தினராக கலந்து கொண்டு, பயிற்சியை ஆரம்பித்து வைப்பார். [உ]

## பிரதம பேராயர் காலமானார்

யாழ்ப்பாணம், செப். 8

தென்னிந்திய திருச்சபையின் பிரதம பேராயர் மகாகனம் றைட் தேவப்பிரியம் ஜேர்மனி சென்றிருந்த சமயம் அங்கு மாரடைப்பால் காலமானார் என்று அறிவிக்கப்படுகிறது.

ஆந்திரா மாநிலத்தின் நந்தியால் மாவட்ட ஆயராகவும் கடமையாற்றிய இவர் இலங்கைக்கு இரு தடவைகள் விஜயம் செய்துள்ளார்.

தென்னிந்திய திருச்சபையின் யாழ். பேராயத்தினூடாக வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பல நிவாரணப் பணிகளை இவர் மேற்கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இவரது வாழ்வுக்கு நன்றி செலுத்தும் வழிபாட்டு ஆராதனை இன்று செவ்வாய் காலை 9.00 மணிக்கு வட்டுக்கோட்டைப் பேராலயத்தில் நடைபெற உள்ளது. [இ]

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், செப். 8

மல்லாகம் ஸ்ரீ முருகன் ஐக்கிய விளையாட்டுக் கழகம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தும் 7 பேர் கொண்ட அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இரு கால் இறுதி ஆட்டங்கள் இன்று நடைபெறுகின்றன.

சென். அன்ரனீஸ் அணியை எதிர்த்து அண்ணா வி. க. அணியும்—

ஞானகலா வி. க. அணியை எதிர்த்து யங்றோயல் அணியும் இன்றைய ஆட்டத்தில் மோதவுள்ளன.

---

நவாலி வடக்கு

## நாச்சிமார் [முருகன்] கோவில் மணவாளக் கோல விழா

**8 - 9 - 92** செவ்வாய் காலை 8 மணிக்கு சங்காபிஷேகமும், மாலை 6 மணிக்கு திருக்கல்யாணமும், திருஉலாவும் நடைபெறும்.

மேளக்கச்சேரி

மானிப்பாய் கண்ணன் குழுவினர்

வில்லிசை

'வில்லிசைக் கலாபூபதி'' ''கலைமாமணி''

எஸ். எஸ். சர்மா அவர்களின் ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினர் வழங்கும் ''தீர்க்க சுமங்கலி'' வில்லிசை நிகழ்ச்சி

— உபயகாரர்.

[22471]

---

BITSMANS

கல்வி நிறுவனம், மானிப்பாய்.

2nd BATCH

துரிதமாக இலக்கணப் பிழையின்றி ஆங்கிலம் பேச 3 மாத பயிற்சி வகுப்புகள்

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**

BY

M. A. ஹரி B. A. Dip. in Eng.

ஆரம்பம்: 9-9-92 புதன் காலை 10.00 மணி.

[C/3348]

---

சாவகச்சேரி நகரசபை

## ஆதனவரி அறிவித்தல்

1992 ஆம் ஆண்டு 3ஆம் காலாண்டிற்குரிய ஆதன வரியை தண்டமின்றி 30-09-92 ஆம் திகதி புதன் கிழமை பகல் 12-30 மணிவரை செலுத்திக்கொள்ளலாமென்பதையும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்பு செலுத்தப்படும் வரியுடன், வசிப்பிட வளவுகளுக்கும் வெற்றுக் காணிகளுக்கும் 15 வீதமும் ஏனைய ஆதனங்களுக்கு 20 வீதமும் சேர்த்து அறவிடப்படும் என்பதையும் வரியிறுப்பாளர்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

எனவே, 30-09-92க்கு முன் வரிகளைச் செலுத்தி இச்சபையுடன் ஒத்துழைக்கும்படி சகலரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

த. நவரத்தினராசா
செயலாளர்
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.
07-09-92

[C/3252]

---

## ராணுவத்தை விட்டு ஓடிய சிப்பாயை பிடிக்க இப்படியும் ஒரு தந்திரம்!

கொழும்பு, செப். 8

இராணுவத்தை விட்டுத் தப்பி ஓடிய சிப்பாய் ஒருவரைப் பிடிக்க இராணுவ கோப்பரல் ஒருவர் கடைப்பிடித்த தந்திரம்பற்றி சுவையான தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.

அம்பாறையில் உள்ள இராணுவ பயிற்சி முகாமில் புதிதாகத்திரட்டப்பட்டவர்களுக்கு பயிற்சி அளிப்பதில் ஈடுபட்டிருந்த கோப்பரல் ஒருவர், சில மைல்களுக்கு அப்பால் உள்ள இடம் ஒன்றுக்கு ஒருநாள் சென்றிருந்தார். அப்போது அவரின் கவனம் பஸ் ஒன்றில் இருந்து இறங்கிய இளைஞர் ஒருவர் மீது திரும்பியது!

கோப்பரல் மீண்டும் கூர்ந்து பார்த்த போது அந்த இளைஞர் சில தினங்களுக்கு முன்னர் தமது பயிற்சி முகாமில் இருந்து தப்பி ஓடியவர் என்பது தெரியவந்தது. மெதுவாகச் சென்று அந்த இளைஞரைப் பிடித்துக் கொண்டார் கோப்பரல்.

ஆனால் அந்த இளைஞர் திமிறியடித்துக்கொண்டு, கால்களில் போடப்பட்டிருந்த பூட்ஸ்களைக் கழற்றி விட்டு 'மரதன்' ஓடத் தொடங்கினார்; கோப்பரலும் பூட்ஸ்களைக் கழற்றி விட்டு இளைஞனைத் துரத்தத் தொடங்கினார்.

'இராணுவத்தை விட்டு ஓடியவன் பிடியுங்கள்' என்று கோப்பரல் பல முறை கத்தியும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த மக்கள் அவனைப் பிடிக்கவில்லை.

மரதன் ஓட்டம் தொடர்ந்தது. கோப்பரல் தனது உத்தியை மாற்றிக் கொண்டார். 'திருடன் திருடன்' என்று கத்திக் கொண்டு ஓடத் தொடங்கினார் கோப்பரல் புதிய உத்தி வேலை செய்தது. கிராமத்துமக்கள் ஓடிக் கொண்டிருந்த இளைஞனைப் பிடித்து கோப்பரலிடம் ஒப்படைத்தனர்.

மரதன் ஓட்டம் முடிந்தது.

---

BITSMANS

கல்வி நிறுவனம், மானிப்பாய்.

A/L 93

பொருளியல்வினா - விடை

ஆசிரியர்

திரு. உதயன்

ஆரம்பம் 8-9-92 செவ் - 3.00 மாலை

(விண்ணப்பங்களை முன்கூட்டியே பதிவு செய்யவும்)

(சி-3346)

---

## கண்ணீர் அஞ்சலி

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஆய்வுகூட உதவியாளராக நீண்டகாலம் சிறப்பாகப் பணிபுரிந்த.

திரு. நாகலிங்கம் இராசசிங்கம்

அவர்கள்

**06-09-92** இல் சிவபதம் அடைந்ததையிட்டு எமது இதய பூர்வமான கண்ணீர் அஞ்சலியை செலுத்துகிறோம்.

அதிபர், விரிவுரையாளர்கள்,
ஆசிரிய. மாணவர்கள்,
ஊழியர்கள்.

[22473]

---

## நீங்காத நினைவில் எங்கள் அன்பு தெய்வங்கள்







தோற்றம்: 09-06-1912 மறைவு: 19-08-1992

அமரர்

கந்தையா குமாரசாமி

(முன்னாள் நல்லூர் சந்தை குத்தகையாளரும், பிரபல வர்த்தகரும்)

மலர்வு: 12-09-1917 உதிர்வு: 20-06-1980

திருமதி

குமாரசாமி சின்னம்மா

மண்ணில்: 29—12—1955 விண்ணில்: 14—11—1978

அமரர்

குமாரசாமி குமாரகுலசிங்கம்

(தங்கம்)

(பிரபல வர்த்தகர், நல்லூர் சந்தை)

எமக்கு வாழ வழி சமைத்திட்ட
எங்கள் அன்புத் தெய்வங்களை
என்றென்றும் மறவோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:

செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர் சார்பாக;
குமாரசாமி பராசசிங்கம் (பாலு)
(மகன்)

[22466]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலர் உணவு நிவாரண வெட்டு;
# ஐ. நா. தூதரகம் கவலை

கொழும்பு, செப். 8

இலங்கையில் உள்ள அகதிகளுக்கு வழங்கப்பட்டுவரும் உலர் உணவு நிவாரணத்தை அரைப்பங்காக கொழும்பு அரசாங்கம் குறைத்துள்ளது குறித்து அகதிகளுக்கான ஐ.நா தூதரகம் கவலை தெரிவித்துள்ளது.

கொழும்பில் உள்ள அகதிகளுக்கான ஐ நா தூதரக அதிகாரி டாக்டர் பீற்றர் நிக்கொலஸ், 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில்—

இந்தியாவில் இருந்து அகதிகளை இலங்கைக்கு திருப்பி அழைத்து வரும் நடவடிக்கையை—உலர் உணவு நிவாரணத்தை அரைப்பங்காகக் குறைத்த செயல் பாதிக்கும் என்று தெரிவித்திருக்கிறார்.

இந்தியாவில் இருந்து இலங்கை திரும்பும் அகதிகளுக்கு கொழும்பு அரசாங்கத்தின் உதவி கிடைக்கும் என்ற உத்தரவாதத்தின் பேரில் தான் அந்த அகதிகளை இலங்கைக்குத் திருப்பிக் கொண்டு வரும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

''தாயகம் திரும்பும் அகதிகள் உலர் உணவு நிவாரணத்திலும், அரசு வழங்கும் உதவியிலும்தான் மீண்டும் வாழ்க்கையை ஆரம்பிக்க வேண்டியுள்ளனர். இந்த உதவிகள் குறைவதாக அவர்கள் உணர்ந்து கொண்ட மாத்திரத்தில் இலங்கைக்குத் திரும்புவது குறித்து அவர்கள் மீண்டும் சிந்திக்கக் கூடிய நிலை ஏற்படும்''— டாக்டர் நிக்கொலஸ் முன்கண்டவாறு எச்சரித்தார்.

டாக்டர் நிக்கொலஸ் மேலும் சொன்னதாவது:

''உலர் உணவு நிவாரண வெட்டுக் குறித்து அரசு எமக்கு முன்கூட்டியே அறிவித்திருக்குமானால் புதிய நிலவரத்துக்கு ஏற்ப எம்மைத் தயார் செய்ய எமக்கு கால அவகாசம் கிடைத்திருக்கும். அகதிகளுக்கான ஐ.நா தூதரகம் வழமையாக முன்கூட்டியே தனது திட்டங்களை ஒழுங்குசெய்கிறது. விசேடமாக துன்பத்துக்குள்ளாகியுள்ள பிரதேசங்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களில் இவ்வாறு தான் எம் அமைப்பு செயல்படுகின்றது''—

இவ்வாறு அவர் அப்பேட்டியில் தெரிவித்தார். (த எ)

## திருமலை அகதி முகாம்களில் நிலவும் இட நெருக்கடி

### அதிர்ச்சியளிப்பதாய் உள்ளதாம்

கொழும்பு செப். 8

திருகோணமலையில் உள்ள அகதிமுகாம்களில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது என்றும்—

அதனால் அம்முகாம்களின் நிலவரம் அதிர்ச்சி தரக்கூடியதாக உள்ளது என்றும் கொழும்பில் உள்ள ஐ. நா. அகதிகள் தூதரக பொறுப்பு அதிகாரி டாக்டர் பீற்றர் நிக்கொலஸ் தெரிவித்தார்.

தாயகம் திரும்பும் அகதிகளை வரவேற்கக்கூடிய நிலையில் திருகோணமலை இல்லை என்று கூறிய அவர், எதிர்காலத்தில் தாயகம் திரும்புபவர்களை மன்னார்த் தீவுக்குக் கப்பலில் அனுப்பி வைக்கும்படி இலங்கை - இந்திய அரசுகளுடன் ஐ. நா. அகதிகள் தூதரகம் பேச்சு நடத்தி வருவதாயும் தெரிவித்தார். மன்னார் நிலவரம் பெரும்பாலும் சிறந்ததாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (த-எ)

## வடபகுதிக்கு தடைசெய்யப்பட்ட எண்ணெய்:
## 2 பிரிகேடியர்கள், இராணுவ அதிகாரிகள் விசாரணையில்

கொழும்பு, செப். 8

அரசு விதித்த தடையை மீறி, வடபகுதிக்கு எண்ணெய் எடுத்துச் செல்வதற்கு பெர்மிட்கள் வழங்கியதாகக் கூறப்படும் - இரண்டு இராணுவ பிரிகேடியர்கள் உட்பட - பல இராணுவ அதிகாரிகள் மீது இராணுவ நீதிமன்ற விசாரணை நடத்தப்படவுள்ளது.

இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'சண்டே ரைம்ஸ்' இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

அநுராதபுரத்தில் உள்ள எண்ணெய் விநியோகஸ்தர் ஒருவருடன் சேர்ந்து இந்த சட்டவிரோதச் செயலில் இந்த இராணுவ அதிகாரிகள் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இக்குற்றச்சாட்டுகள் பற்றி இராணுவ சட்ட ஆலோசகர்கள் பரிசீலனை செய்தனர் என்றும்—

அவர்கள் மீது இராணுவ நீதிமன்ற விசாரணை நடத்துவதற்கான நடவடிக்கைகள் பூர்த்தியாக்கப்பட்டு வருவதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

## வடக்கு - கிழக்கு மற்றும் மலையக
## தமிழரிடையே ஒற்றுமை அதிகரிக்க வேண்டும்

### தொண்டா கூறுகிறார்

கொழும்பு, செப். 8

வடக்குக் கிழக்குத் தமிழர்களினதும், மலையகத் தமிழர்களினதும் ஒற்றுமை அதிகரிக்க வேண்டும். அப்போது தான் நாம் எதிலும் வெல்ல முடியும்.

கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் அமைச்சர் தொண்டமான் இவ்வாறு சொன்னார்.

தமிழன் எங்கிருந்தாலும் நான் தமிழன் என்ற மனநிறைவுடன் வளர வேண்டும். அர்த்தமற்ற பிரிவினால் நாம் ஒற்றுமையை சீர்குலைத்து விடக்கூடாது என்றும் அவர் மேலும் சொன்னார். (த)

## பல்கலைக்கழக ஆசிரியர் சம்மேளனம் வேலை நிறுத்த முஸ்தீபு!

கொழும்பு, செப். 8

பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு புதிய சம்பளத்திட்டம் ஒன்றை அமுல் செய்யும் வரை 60 சதவீத இடைக்கால அலவன்ஸ் வழங்கப்பட வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கையை முன்வைத்து இம்மாதம் 29 ஆம் திகதி அடையாள வேலை நிறுத்தத்தில் இறங்க பல்கலைக்கழக ஆசிரியர் சம்மேளனம் முடிவு செய்துள்ளது.

9 பல்கலைக்கழகங்களையும் சேர்ந்த இரண்டாயிரம் ஆசிரியர்கள் தமது சம்மேளனத்தில் அங்கம் வகிக்கிறார்கள் என்றும்—

அடையாள வேலை நிறுத்தம் மூலம் தமது நோக்கம் நிறைவேறாது விட்டால் மாற்றுத் தொழிற் சங்க நடவடிக்கையில் ஈடுபட வேண்டிய நிலை உருவாகும் என்றும்— பல்கலைக்கழக ஆசிரியர் சம்மேளன பொதுச் செயலாளர் கலாநிதி நளின் டி சில்வா தெரிவித்தார். (இ)

## அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, செப். 8

பாதுகாப்பு வரியை அதிகரித்ததனால் நிதி, வர்த்தகம், வங்கி ஆகிய துறையைச் சேர்ந்தவர்கள் வரிநிவாரணம் வழங்குமாறு விடுத்த வேண்டுகோளை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது. (த-10)

## நவசமசமாஜக்கட்சி கண்டனம்

கொழும்பு, செப். 8

அகதிகளுக்கான நிவாரணத்தை அரைவாசியாகக் குறைக்கும் அரசின் நடவடிக்கையை நவசமசமாஜக் கட்சி கண்டித்துள்ளது. இது தொடர்பாக ஜனாதிபதிக்கு அவசர தந்தி ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

## மாதாந்த உதவிப் பணம்

யாழ்ப்பாணம், செப். 8

உடுவில் உதவி அரச அதிபர் பிரிவிற்குட்பட்ட காசநோய், புற்றுநோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்த உதவிப்பணம் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை ஒன்பது மணிக்கு அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும் என்று வலி - தெற்கு உதவி அரச அதிபர் செல்வி தனுஜா தணிகாசலம் தெரிவித்தார். (த-3)


## வரலாறும் சமூகக்கல்வியும்
## O/L 1992
### வினா - விடை வகுப்புக்கள்

1. விக்னா கல்வி நிறுவனம் [யாழ்ப்பாணம்]
2. அறிவொளி கல்விக் கழகம் [நல்லூர்]
3. சயன்ஸ் அக்கடமி [நல்லூர்]
4. மக்னட் கல்வி நிறுவனம் [கலியன்காடு]
5. அறிவொளி கல்விக் கழகம் [ஆனைக்கோட்டை]

ஆசிரியர்: க. கோபி

ஆரம்பம்: 10 - 09 - 1992

[சி-8...]



வட பிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கங்களின் சமாசம்

## அறிவித்தல்

### நிவாரணக் குறைப்பை முன்னிட்டு
வெகுஜனப் போராட்டம்
09 - 09 - 92 புதன் காலை 9 மணிக்கு

சகல கிளைச் சங்கங்களையும், கிளைச் சங்க அங்கத்தவர்களையும் நல்லூர் கோவில் முன்றலில் வந்து கூடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

— தலைவர்.

1083, கே. கே. எஸ் வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

[22464]


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 17 | 09 |
| 11 | 08 |
| 1919 | 1992 |

அமரர்

### சின்னட்டியர் கணபதிப்பிள்ளை

(முன்னாள் ஆசிரியர்-அல்வைப்பிட்டி, முன்னாள்—மீசாலை தெற்கு, உரும்பராய் ப.நோ.கூ சங்க முகாமையாளர்)

எங்களுக்காகவே ஒவ்வொரு கணமும் வாழ்ந்து
உழைத்த ஒளியான அப்பா!
உயிருக்குயிரான உத்தமரே!
உங்களை நினைந்து உருகிக் கரைகின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
என்றும் பிரார்த்தித்துக் கொண்டே இருப்போம்.

பிள்ளைகள். மருமகள்.

மாவடிப் பிள்ளையார் கோவிலடி,
மீசாலை கிழக்கு,
மீசாலை.

(22465)

## 16 ஆம் நாள் நினைவஞ்சலியும் கல்லெடுப்பும், சபிண்டீகரணமும்



| மலர்வு: | மறைவு: |
|---|---|
| 18 | 24 |
| 02 | 08 |
| 1900 | 1992 |

திருமதி

### கண்மணி வயித்திலிங்கம்

எங்கள் குடும்ப விளக்கு அணைந்தபொழுது, இறுதிக்கிரியையில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் இன்னும் பல்வேறு வழிகளில் உதவி புரிந்த உறவினர். நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இன்று (08 - 09 - 1992) செவ்வாய்க்கிழமை நடைபெறும் கல்லெடுப்பிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொண்டு, மதிய போசனத்தில் பங்குபற்றும்படியும் அன்புடன் அழைக்கின்றோம்.

மகன். பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

''மனோபலம்''
செட்டிய குறிச்சி,
அச்சுவேலி.

[22460]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேர்த்

08—09—1992

( தெல்லியூர் துர்க்கையின் )
(தேர்க்கோலம் திவ்வியமே!)

மானிப்பாய் பகவான் ஸ்ரோர்ஸ்
உடுவில் றோட், மானிப்பாய்.

பத்திரிகை முகவர்:
உரிமையாளர்:
ஆர். தயாநிதி
வண்/வட மேற்கு, மானிப்பாய் வீதி,
ஆறுகால்மடம்.

சிவசம்பு சிவராசா
லக்ஷ்மி ஸ்ரோர்ஸ்
கட்டுடை, மானிப்பாய்.

பாடசாலைப் பாடப் புத்தகங்களும் மற்றும் இந்திய வெளியீடுகளும், காகிதாதிகளும், அச்சுவேலைகளும் எம்மிடம் சகாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
Sri Lanka Book Depot
234, K.K.S., Road,
Jaffna.

போஸ்கோ
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சுப முகூர்த்தங்கள் மற்றும் அன்றாடத் தேவைகளுக்கான அனைத்துப் புடைவைகளும் வாங்க இன்றே நாடுங்கள்!
சீமாட்டி
(ஜவுளி சமுத்திரம்)
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ் நகரில் தரமான, சுவையான ஐஸ் கிறீம் வகைகளுக்கும், குளிர் பானங்களுக்கும் பெயர் பெற்ற ஸ்தாபனம்
கல்யாணி கிறீம் ஹவுஸ்
73, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

சுப முகூர்த்தப் பட்டுப் புடைவைகளை உங்கள் விருப்பத்தில் தெரிவு செய்ய ஒரே ஸ்தாபனம்
சோபனா ஆடை அகம்
16, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

தரம் நாடுவோர் தவறாது நாடும் இடம்:
லதா நகை மாளிகை
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

அன்றைய நாளிலும், இன்றைய சூழ்நிலையிலும் உங்கள் தேவை அறிந்து சேவை செய்பவர்கள்
அர்ச்சனா நகை மாளிகை
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

அழகிற்கு அழகு செய்யும் அழகிய நகைகளுக்கு
நதியா ஜுவல்லறி
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு
அருணா ஆபரண மாளிகை
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## துர்க்கையின் தேர்விழா காண்போம்

ஆவணியிலே உத்தராட நாள் தேரேறி
அருளோணம் தீர்த்தம் நல்கும்
அமுதமே நமசிவாய அழகியே தெல்லியூர்
ஆதி துர்க்கா தேவியே

இவ்வாறு பாடிப் பாடிப் பரவசமடையும் நாள் தெல்லி நகர்த் துர்க்கையின் தேர் விழா நாளாகும்.

தனிமனித வாழ்வும், சமூக வாழ்வும் சிறப்புற்றிருக்கத் தைரியம் வேண்டியது என்பதை வீரத்தின் சின்னமான துர்க்காதேவி விளக்குகிறாள். அவளுடைய ஆணை இராணுவ வீரனுடைய ஆணை போன்றது. ஆதலால் அந்த ஆணையை மீறி யாருமே வாழ முடியாது. இவ்வுலக வாழ்க்கையை நன்கு நடத்தச் செல்வமும் வேண்டியது என்பது யாவரும் அறிந்ததே. அதனையும் இணைந்து வழங்குபவள் அன்னை.

''ஆத்தாளும் அபிராம வல்லியும்; அண்டமெல்லாம் பூத்தாளும்; புவி அடங்கக் காத்தாளும்'' — ஆகிய துர்க்காதேவி இன்று சித்திரத் தேரில் பவனிவரும் காட்சியைக் கண்டு களிக்கப் பெற்றவர்கள் பூர்வ புண்ணியப் பேறுடையவர்களே.

இதனாலேயே கலைமகள் ஆசிரியர் போன்ற பேரறிஞர் 1978ஆம் ஆண்டு இங்கு வந்து பின்வருமாறு பாடிப் பரவினார்கள்.

வாருங்கள், தேரை வணங்குங்கள்; ஈர்க்கலொன்றாய்ச் சேருங்கள்; துர்க்கை-
திறம்பேசி - ஆரும்
கருணைமிகக் கொள்ளுங்கள்; காசினியில் இஃதே
அருள்சேர்க்கும்
நல்லதோர் ஆறு.

நாமனைவரும் இவ்வாறு பாடிப் பரவிப் பணிந்து நிற்போம்.

''அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்''

துர்க்கா துரந்தரி,
தங்கம்மா அப்பாக்குட்டி,
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி-
தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

அன்னை ... மன ...

அம்பாள் மெய்ய... அம்பிகை... களையும் பெற்று... ஸ்ரீ துர்க்கா... பொழுது அவளது... ஒளியை நவமுலை... ளவிட்... பராசக்தியின் ... பெறுவதைக் கா... ஒருமையுடனும், ... இரைப்பற்றிச் ... இன்னல்கள் நீங்... கள்!

அன்பர்களு... வேண்டி எமது ... என்றும் ...

# துர்க்கையம்மனை துதித்
# துயர்களைக் களைவோ

தூக்கி முடித்த சடையும், அருள் தவழும் புன்முறுவலும், கருணை ததும்பும் திருவிழிகளும் சங்கு, சக்கரம், சூலம், கபாலம் ஏந்திய கரங்களும் அடியார்கள் நெஞ்சத்திரைகளில் என்றும் நின்று நிலவக் கூடியது துர்க்கையின் அருட்காட்சி.

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து, இவ்வுலகெங்கும் நிறைந்து நிற்பவள் பராசக்தி. இப்பிரபஞ்சத்திற்கு அசைவும், அறிவும், ஆற்றலும் தந்து ஆட்டுவிப்பதும் அந்தச் சக்தியே. இறைவனையே அரைய வைத்துப் பஞ்சகிருத்தியங்களும் நடைபெற மூல காரணமாய் நிற்பவள் இப்பரதேவதை. உள்ளத்தின் உள்ளொளியாய் விளங்குகின்ற துர்க்கை, வாக்கின் ஒளியாய் வடிவெடுத்து அனைத்தையும் அசைவிக்கிறாள்.

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயம் வட இலங்கையில் மிகப் புராதனமானதும் சைவப் பெருமக்களால் துதித்துப் போற்றப்படும் தலங்களுள் ஒன்றுமாகும். நகுலகிரித்தீர்த்தம், மாவைக் கந்தன் ஆலயம் என்பவை அருகில் இருக்க, கிழக்கு நோக்கிய சந்நிதியுடன் இவ்வாலயம் விளங்குகின்றது. அவற்றுடன் தொடர்புடைய பூர்வீகம் இந்த ஆலயத்துக்கு உண்டு.

இவ்வாலய வரலாறு மகான்களின் ஆசிபெற்ற சிறப்பு



டையது. பத்து ஆண்டுகள் காசியிலிருந்து துர்க்கை உபாசனை புரிந்த ஒரு பெருஞானியால் ஆதியில் ஸ்தாபிக்கப்பட்ட ஆலயம் இது.

தெல்லிப்பழை மேற்கைச் சேர்ந்த கதிர்காமர் என்னும் பெரியார் தல யாத்திரைக்காக வட இந்தியாவுக்குச் சென்றார். அங்கு பல தலங்களையும் தரிசித்த போது அறுபத்துநான்கு சக்தி தலங்களிலும் காசி சொர்ப்பதேஸ்வர பீடத்தில் உள்ள துர்க்கா தேவியே சகல கலை அம்சங்களிலும் நிறைந்ததாக அவருக்குத் தோன்றியது. அவர் இலங்கைக்குத் திரும்பும் போது வெண்கலத்திலான துர்க்கை இயந்திரம் ஒன்றையும், திருமுகசெண்டி ஒன்றையும் கொண்டு வந்தார்.

அவற்றைத் தாபனம் செய்து பூசித்தார். இதுவே இன்று வேண்டுவார் வேண்டுவதெல்லாம் ஈயும் துர்க்கா தேவி தேவஸ்தானமாக மாறியுள்ளது. அல்லலுற்ற இக்காலத்தில் அம்மாளின் ஆலயம் நோக்கிப் பக்தர்கள் பக்தி சிரத்தையுடன் செல்வதை நாம் காணலாம்.

பூரண பிரமஸ்வ ரூபிணியாகவும், வேண்டிய யாவும் வழங்கும் அன்னையாகவும், சித்தர்களின் தலைவியாகவும் இருக்கும் துர்க்காதேவி பசி, தாகம், ஒளி, சோம்பல், தயை, கருத்து, பொறுமை, பிரமை, ஞானம், மகிழ்ச்சி, செல்வம், வீரம், மாயை ஆகியவற்றுக்கு அதிதேவதையாக இருக்கிறாள். மற்றிவரைப் பாதுகாக்கும் தேவி அவள்; ''எப்போது அரக்கர்களால் துன்பம் உண்டாகிறதோ அப்போது நான் அவதரித்துப் பகைவர்களை நாசம் செய்வேன்'' என வாக்கு அளித்துள்ளாள்.

துர்க்கை யானைத்தோல் போர்த்துப் புலியின் உரியை உடுத்துள்ளாள். கானத்து எருமைக் கருத்தனை மேல்

நிற்கின்றாள். ... வணங்க மறை ... யாகி ஞானக் ... விளங்குகின்றா... லணிந்த கைகளி... இருக்கின்றாள், ... யில் ஏறிமகிஷனை ... அரி, அயன், அ... மூவரின் இதய... சோதி விளக்கா...

- துர்க்கை...

வயங்குகின்றாள் ... தாமரை போ... சங்கும், சக்கர... றன. சிவந்த ... யுடைய இங்... இவர்ந்து வருகி... பிரானின் திரு... பகுதியில் உ... அவளை வேத...

### துர்க்கையே துணையாவாய்!

துர்க்கைத் தாயே தேரில் வருக
தெல்லியில் கோயில் கொண்டாய் வருக
துர்க்குண அசுரனை ஒழித்தாய் வருக
தேவர் துயரம் தீர்த்தாய் வருக
சர்வ லோக நாயகி வருக
சகலதும் அறியும் சக்தி வருக
தர்மம் தனை நிலை நாட்டிட வருக
தரணியில் எங்கள் துணையென வருக

- நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்.

அன்னை...

ராகம் — ...

அரியணை ...
அன்னையே ...

கற்றவர் ...
கொற்றவ...

கல்லையும் ...
புல்லையும் ...
புல்லரைப் ...
நல்லவர் ...

மூவர்க்கும் முதற் பொருளாய்
முத்தொழிற்கும் வித்தாகி
யாவர்க்கும் தாயாகும்
எழிற்பரையே துர்க்கையே!
தேரேறி வந்து கருணை பொழிவாய் தாயே!

★

BOND INSTITUTES
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

அருட்பெருஞ் சக்தியே, அம்பிகையே!
தேரேறி வந்து எங்கள் துன்பம் துடைப்பாய் அம்மா!!
முதல் தர குளிர்களி, குளிர்பான வகைகளுக்கு
லிங்கம் கூல் பார்
வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

சோதிவடிவானவளே,
உன்பாதம் சரணம் ...
போட்டோ...
தரமான தாள்களில் ...
விரைவாக...
'ஸ்கைல...
281B, மணிக்கூட்டு கோபுர வீ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ர்த்திருவிழா சிறப்பிதழ் ★

## ன்னையை நம்புங்கள் மன அமைதி தருவாள்


மெய்யடியார்களே!
ம்பிகையைச் சரண் புகுந்தால் சகல சௌபாக்கியங் பெற்றுய்யலாம்.
ரீ துர்க்காதேவி தேரில் ஆரோகணித்து பவனி வரும் அவளது கருணை பொழியும் திருமுகத்தின் ஞான தவமுடையாரே கண்டு ஆனந்தமுறுவர்.
ளவிடற்கரிய அனர்த்தங்கள் நேர்ந்த காலையும் யின் அருளாட்சி யாதொரு தடையுமின்றி நடை தைக் காண்கின்றோம். திரிகரண சுத்தியோடும். டனும், பயபக்தியுடனும் அம்பாளின் திருவடிகளை ற்றிக் கொண்டால், எம்மைப் பற்றிவரும் இடர். கள் நீங்கி மன அமைதி பெறுவது நிச்சயம். நம்புங்

ன்பர்களுக்கு அம்பாளின் திருவருளை உவமார எமது நல்லாசிகளை வழங்குகின்றோம்.
றும் வேண்டும் இன்ப அன்பு!

ஸ்ரீலஸ்ரீ குருமஹா சந்நிதானம்,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்,
யாழ்ப்பாணம்.

## ...த்து ...ாம்!

தொழுதேத்திப் பணிபுகின்றன
இன்று அன்னை துர்க்கை அழகுத் தேரேறி அருள் பாலிக்க வருவது அகிலத்தை



கருணைப் பொழிலாக மாற்றவே.
அன்னை தேர் ஊர்ந்து வரும் காட்சியைத் தரிசிப்பவர்கள் ஆத்மீக சக்தி பெற்
[7 ஆம் பக்கம் பார்க்க]

ள். வானோர்கள் றை மேல் மறை னக் கொழுந்தாய் றாள். வளைய கைகளில் வாளேந்தி றாள். மான் ஊர்தி ஷனை அழித்தாள். ், அரன் என்னும் இதய மலர்களில் ளக்காக சுடர் வீசி

### ...கைதாசன் -

றாள். அவளது போன்ற கைகளில் க்கரமும் தவழ்கின் ந்த கண்களை இங்கத்தின் மீது வருகின்றாள். சிவ திருமேனியின் ஒரு உறைகின்ற வேதங்களெல்லாம்

## ...னையே! துர்க்கை அம்மா!!

— கல்யாணி தாளம் — ஆதி

பல்லவி

...ணை மீதமர்ந்து அன்பரின் துயரோட்டும்
...னையே துர்க்கை அம்மா — ஆர்க்கும்
......(அரி......)

அநுபல்லவி

...ர் பொலிகின்ற தெல்லியூர் வளர்பவளே!
...றவையே அம்மா வெற்றியின் திருமகளே!!
.. ...(அரி......)

சரணம்

...யும் கனியாக்கும் அருட்சுடர் துர்க்கையன்னை!
...யும் புலியாக்கும் செழும்சுடர் எங்களன்னை!!
...ரப் பொடியாக்கும் அருட்சுடர் துர்க்கையன்னை!
...ர் நலம் காக்கும் பெரும்சுடர் எங்களன்னை!!
......(அரி.. ...)

★

......'' முருகு''


( தெல்லியூர் துர்க்கையின் )
( தேர்க்கோலம் திவ்வியமே!)

நவநாகரீக உடைகளுக்கு நீங்கள் நாட வேண்டிய இடம்:
**பரீஸ் மாட்ஸ்**
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

சகல விதமான செரமிக்ஸ் பொருள்களுக்கு
**நியூ விமாகி**
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

**சிங்கம்ஸ் மருந்தகம்**
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**பரணி மருந்துச்சாலை**
456, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**எரிக் கணேஷ்**
566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**New Master Institute**
B. M. C. ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

யாழ். நகரில் கம்பியூட்டர் கல்விக்கு சிறந்த இடம்:
**யுனிக்கோ கம்பியூட்டர் சென்ரர்**
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

பத்திரிகை முகவர்:
**'ஏ நீட்ஸ்'**
ஜெட்மோட்டோர்ஸ் கட்டடம்,
கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

பத்திரிகை முகவர்:
**கனகா றேடர்ஸ்**
திருநெல்வேலிச் சந்தி, யாழ்ப்பாணம்.

**மல்லிகா ஸ்ரோர்ஸ்**
[மத்திய சந்தைக்கு முன்பாக]
மானிப்பாய்.

பெண்மைக்கு மெருகேற்றும் கலை நயம் மிக்க நகைகளை செய்து சொலின
**சிறி அமலா நகை மாளிகை**
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அன்றும், இன்றும் படப்பிடிப்பில் கை தேர்ந்தவர்கள்
**பாரத் ஸ்ருடியோ**
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சகல வகையான மருந்து மற்றும் பால உணவு வகைகளுக்கும் இன்றே நாடுங்கள்:
**ஆர். வீ. ஜி. மெடிக்கல்ஸ்**
504, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

...வளே, துர்க்கைத் தாயே!
...ரணம் அம்மா, தாயே!
...ாட்டோஸ்ரற்
...ில் தெளிவான பிரதிகளை
...ரவாகப் பெற
↓
...கலைன்ஸ்'
...புர வீதி, யாழ்ப்பாணம்.

தெல்லியூர் அமர்ந்த துர்க்கையே!
தேடி வந்தோம் தாயே, தேசிவினை போக்கிடுவாய்!
உள்ளூர் உற்பத்திகளிலிருந்து
தயாரிக்கப்படுவது
**★ ஜீவாகாரம் ★**
இது வளர்ந்து வரும் குழந்தைகளுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும், போஷாக்கு குறைந்தவர்களுக்கும், ஏனையோருக்கும் ஏற்ற ஓர் உப உணவாகும். உங்கள் தேவைக்கு ஏற்ப தொகையாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
**அண்ணா தொழிலகம்,**
இணுவில்.


வடபிராந்திய

## இராணுவத் தளபதியாக லக்கி அல்கம நியமனம்?

கொழும்பு, செப். 8
வட பிராந்திய இராணுவத் தளபதியாக பிரிகேடியர் லக்கி அல்கம நியமிக்கப்பட்டுள்ளார் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. இவர் தற்போது கிழக்குப் பிராந்தியத் தளபதியாக உள்ளார்.

வட பிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெரி சில்வா எதிர்வரும் அக்டோபர் மாதம் இராணுவத் தலைமை அதிகாரியாக (Chief of Staff) நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் —

மேஜர் ஜெனரல் பாலரட்ணராஜா கடந்த முதலாம் திகதி இப் பதவியில் இருந்து ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து, அவரின் இடத்துக்கே ஜெரி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார் என்பதும் தெரிந்ததே.
(த)


வருடாந்த உற்சவ
**நிறைவு விழா**

வரலாற்றுச் சிறப்புடைய கொக்குவில் கிழக்கு பொற்பதி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த உற்சவ நிறைவு விழா நாளை 09-09-92 புதன்கிழமை நடைபெறும்.

உற்சவ தினங்களில் பல்லாயிரக்கணக்கான அடியார்களுக்கு தொடர் சொற்பொழிவாற்றிய
சைவத்தமிழ் வித்தகர்
திரு. சிவமகாலிங்கம் (பி. ஏ., டிப். இன். எடியு)
அவர்கள்
அன்றைய தினம் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்படுவார்கள்.

இவ்வண்ணம்,
ஆலய பூசகர்,
தி. சேகர் ஐயர்.

பிரசுர அன்பளிப்பு:
ஹரன்,
திருநெல்வேலிச் சந்தி,
திருநெல்வேலி.
(சி-3247)

ஓய்வு பெறுதலும் பாராட்டும்
**திருமதி தவமணி கனகசபை**

எழுதுமட்டுவாள் உப அஞ்சல் அதிபர் திருமதி தவமணி கனகசபை தமது 43 வருட தொடர்ந்த சேவையை முடித்து 65 ஆவது வயதில் (08-09-1992) இன்று ஓய்வு பெறுகிறார்.

தபால் அத்தியட்சகரும், பளை தபால் அதிபர்களும், ஊழியர்களும் நன்மதிப்பையும், பாராட்டையும் தமது சேவைக்காலத்தில் பெற்ற இவர், எழுதுமட்டுவாள் தபால் ஊழியரதும், பொதுமக்களதும், அன்பையும், பாராட்டையும் என்றென்றும் பெறுகிறார்.

இவர் நீண்டகாலமாக மாதர் சங்கத் தலைவியாக பொது வாழ்வில் ஈடுபட்டாரென்பது குறிப்பிடத்தக்கது. அன்னாரது சேவைக்கு நன்றிகளும் எமது வாழ்த்துகளும்.

தபால் ஊழியர்கள்,
எழுதுமட்டுவாள்.
(32462)


## அறிவித்தல்

இராணுவ ஆக்கிரமிப்பு காரணமாக இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கான நிவாரணம் அரைவாசியாகக் குறைக்கப்படுவதை ஆட்சேபித்து நாளை புதன் கிழமை (09 - 09 - 1992) நடத்தப்படும் பேரணி, யாழ். செயலகம் முன்பாக மறியல் போராட்டம் ஆகியவற்றுக்கு ஆதரவாக சகல துறை வர்த்தக நிலையங்களும் அன்று மூடப்பட்டிருக்கும்.

அன்று காலை 10-00 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோவிலில் இருந்து யாழ். செயலகத்திற்கு புறப்படும் பேரணியில் சகல வர்த்தக ஸ்தாபன உரிமையாளர்களும், அவர்களைச் சார்ந்தவர்களும் கண்டிப்பாகப் பங்குபற்றுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

செ. கந்தசாமித்துரை,
தலைவர்,
வட பிராந்திய வர்த்தக சங்கம்.
(சி-3248)


**ENGLISH CLASSES**
GRAMMAR (E. S. L. Level)
Commencing on :- 09 - 09 - 1992
Monday
Tuesday } 11-30 a. m. — 12-30 p. m.
Friday
**VICKNA TUITION CENTRE**
52, STANLEY ROAD. JAFFNA.
(சி-3342)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இறக்குமதி செய்யப்பட்ட பீற்றூட் விதைகள்விற்பனைக் குடை (100g கின்)தொடர்பு: பிள்ளையார், 251, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். சனி, ஞாயிறு தினங்களில் வீட்டிலும் பெறலாம்.இல:07, கைலாச பிள்ளையார் கோவில் பின் வீதி, நல்லூர். [22456]

### மலிவு விற்பனை

மாணவர்களுக்கு அப்பியாச கொப்பி, புத்தகங்கள் மலிவு விலையில் விற்பனையாகிறது. றோணியோ, குறித்தநவணை யில் தரமாக செய்து கொடுக் கப்படுகிறது. அறிவகம் புத் தகசாலை, 374, வெலிங்டன் சந்தி அருகாமை, யாழ்ப்பா ணம். (சி/3181)

### தேவை

கோவில் வேலையில் அனு பவம் உள்ளவரும் பல வேலை களும் செய்யக்கூடியவருமான ஒருவர் உடன் தேவை. நேரில் வரவும். துர்க்காதேவி தேவஸ் தானம், சாவகச்சேரி. [22453]

### PERSONAL CLASSES

G. C. E. (O/L) 92 கணித வகுப்புகள் அடிப்படையிலி ருந்து பாடத்திட்டம் முழு வதையும் துரித முறையில் பல வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் சித்திக்கு உத் தரவாதமளித்து கற்பிக்கப் படும். வாரந்தோறும் பயிற் சிப் பரீட்சை. ஏனைய வகுப் புகளுக்கும் கணிதம் கற்பிக் கப்படும். Kana, Pararasa-sekaran, No 8, Fletchers Lane, Chundikuli, Jaffna. [22390]

### SPOKEN ENGLISH

Spoken English With Grammar and Literature. ஆங்கிலம் பேசப் பயிற்றப்படு கிறது. மூன்று மாதப் பயிற்சி கிழமையில் இரண்டு நாட்கள் V. N. Kandasamy A I B. (Part-1) (London) Inter (London) இல: 87, திருநெல்வேலி றோட் (பாலத்துக்கு அண் மையில்), கொக்குவில். [22455]

### வெற்றுப் பைக்கற்று

பாமா வெற்றுப் பைக் கற்றுகள் தொகையாகவும், சில்லறையாகவும் தேவைப் படுகின்றன. இருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும். அண்ணா தொழிலகம் இணு வில் (சி 3341)

### இலவச திருமண சேவை

வயது 28, அவிட்டம், செவ் வாய்- 12, சொந்த வியாபா ரம், லொறி வசதிகள் உடைய வருக்கு ஏற்ற மணமகள் தேவை. ஞாயிறு காலையில் சேவையைப் பெற்றுக்கொள்ள லாம். து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. [5301]

### எழுதுனர் பரீட்சை

எழுதுனர் போட்டிப் பரீட் சைத் தேர்வுக்கான பொது விவேகப் பயிற்சி வெளிவந் துள்ளது க.குணராசா,எம் ஏ. எல்லாப் பிரபல புத்தகசாலை களிலும் கிடைக்கும். [22449]

### கராட்டி வகுப்புகள்

புதிய கராட்டி வகுப்புகள் நடைபெறுகின்றன. வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு நாட் களில் காலை 6 - 00 மணி- 8 - மணி வரை இடம்: சைவ பரிபாலனசபை. நீராவியடி. மாஸ்டர் ராஜன். (22440)

---

வெளிவந்துவிட்டது - விற்பனையாகின்றது!

## எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சைக்கான

வழிகாட்டி

★ பொது விவேகம் ★ மொழித்திறன்

ஆக்கம்: T லோகநாதன் (B.A.)
வெளியீடு: அஸ்ரன் பதிப்பகம்.

(எல்லாப் புத்தகசாலைகளிலும் பெறலாம்)
(தொகையாகப் பெறின் 20% கழிவுண்டு)

(சி/3243)

---

## முக்கிய அறிவித்தல்

## NEW SCIENCE HALL

KANNATHIDDY ROAD - JAFFNA.

92 A/L August நடைபெற்ற தாவரவியல் பரீட் சைக்கு விடை அளிக்குமைக்கு புள்ளி வழங்கும் முறை பற்றிய கலந்துரையாடல் 08- 09 - 92 (இன்று) காலை 10 - 00 மணிக்கு நடைபெற இருப்பதால், விரும்பிய தாவரவியல் மாணவர்கள் அனைவரையும் கல்வி நிறு வனத்தில் ஒன்று கூடும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

(கி/3340) - நிர்வாகம்

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 07 — 09 — 1960



உதிர்வு: 09 — 08 — 1992

## திருமதி சகுந்தலாதேவி சிவகுமார்

கள்ளமிலா வெள்ளையுளக் கமலந் தன்னால்
கரைகடந்த அன்புடனே எம்மை ஈர்த்தாய்
தெள்ளுதமிழ் துள்ளிவரும் உந்தன் நாவால்
தேனாற்று வெள்ளமெனத் தெளிவு சேர்த்தாய்
வள்ளமதாய் எமைத்தாங்கி வழிசமைத்த
வாடாத மென்சுடரே! சகுந்த லாவே!
புள்ளெனவே புயலாகப் பறந்து சென்றாய்
புனிதன்தா வேற்றுப்பே ரின்பம் பெற்றாய்.

பிரிவுத் துயரால் பெருநோயுறும்;

அன்புத் துணைவன்,
அப்பா, அம்மா, மாமா, மாமி, அக்கா,
மைத்துனர்கள், மைத்துனிகள்,
உடன் பிறவாத சோதர, சோதரிகள்.

9/2 கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
கண்டிக்குளி,
யாழ்ப்பாணம். (5289)

---

அரசாங்க அறிவித்தல்

சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்.

## விலைக்கூறு கோருதல்

கீழ்க்காணும் பொருள்களை வழங்குவதற்கான விலைக்கூறுகள் 16-09-1992 ஆம் திகதி பகல் 12-00 மணிக்கு முன்பாக சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரினால் கோரப்படுகின்றன. வழங்கக் கூடிய பொருள்களுக்கு மட்டும் விலைக்கூறுகளைச் சமர்ப் பிக்கவும்.

| | | |
|---|---|---|
| 1 | மண்ணெண்ணெய் அடுப்பு (எட்டுத்திரி - 168 சீனா) | — 36 |
| 2. | சோஸ்பான் 16 x 9 அலுமினியம் (Sauce Pan) | — 36 |
| 3. | சோஸ்பான் 12 x 11 அலுமினியம் (Sauce Pan) | — 36 |
| 4. | வாளி 10'' (ஜீஐ) | — 100 |
| 5. | வாளி 12'' (ஜீஐ) | — 100 |
| 6. | கேற்றில் அலுமினியம் 4 பைந் | — 36 |
| 7. | கேற்றில் அலுமினியம் 6 பைந் | — 36 |
| 8. | பொய்லர் அலுமினியம் 12 x 6 (Boiler Aluminium) | — 24 |
| 9. | பொய்லர் அலுமினியம் 10 x 5 (Boiler Aluminium) | — 24 |
| 10. | ஆமைப்பூட்டு 2½'' பித்தளை குளோப் | — 48 |
| 11. | ஆமைப்பூட்டு 2'' பித்தளை குளோப் | — 48 |
| 12. | மண்வெட்டி 10 x 8 உள்ளூர் தயாரிப்பு | — 10 |
| 13. | அலிக்கன் வாம்பு | — 50 |


ஏற்றுக் கொள்ளப்பட்ட விலைக்கூறுதாரர் 01-10-1992 ஆம் திகதிக்கு முன் மேற்குறிப்பிட்ட பொருள்களை வழங்கவேண்டும்.

வைத்திய கலாநிதி பொ. இரத்தினசபாபதி,
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்,

சு.சே.பி.ப. பணிமனை,
57, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.
03-09-1992. (கி-3233)

---

# ஈராண்டு நினைவலைகள்





அமரர்
## கோபாலபிள்ளை இராசப்பா

தோற்றம்: 11 — 12 — 1930
மறைவு: 09 — 09 — 1990

செல்வி
## இராசப்பா சித்திரா B.Sc.

தோற்றம்: 13 — 04 — 1968
மறைவு: 08 — 09 — 1990

(14, அன்னசத்திர லேன், யாழ்ப்பாணம்)

வழியறியாப் பயணமதை தந்தையுடன் சென்றதனால்
விழி நீரால் விடியலையே தேடுகின்றேன் சித்திரா!
கூடிக்குலாவிய கூண்டுக் கிளியது,
கூடிய விரைவில் என்னை விட்டகன்று ஈராண்டாகியது!
உன் நினைவில் ஓராயிரம் கனவுகள்
ஒன்றித்த நாட்களது பாரினில் இனி எப்போ தோழி!
இருவரினதும் ஆத்ம சாந்திக்காக அநுதினமும் இறைவனைப் பிரார்த்திக்கும்,

உன்தோழி;
சா. கீதாஞ்சலா.

வேலணை வடக்கு,
வேலணை - 5. [22428]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

## வாய்மையும் ஒற்றுமையும்

தமிழர்கள் சுதந்திரம் பெற வேண்டுமானால், வாழ்க்கையில் வாய்மையும், தூய்மையும் அவசியம். எம்மிடையே ஒற்றுமையும் அவசியம். ஒற்றுமை நிலவுவதற்கு வாய்மை தேவை.

இவ்வாறு வள்ளுவர் விழாவில் பேசுகையில் திருமதி நாச்சியார் செல்வநாயகம் தெரிவித்திருக்கிறார். அவரது கருத்து ஏற்றுக்கொள்ளக் கூடிய சரியான ஒன்றாகும். அத்தோடு காலத்துக்கு உகந்ததுமாகும்.

சிங்களவர்களின் அடக்குமுறையிலிருந்து மீண்டு தமது தலைவிதியைத் தாமே நிர்ணயிக்கும் அதிகாரமும், உரிமையும் உள்ளவர்களாக, சுதந்திர மனிதர்களாக வாழவேண்டும் என்பதே ஈழத்தமிழர்களின் நெடுநாளைய விருப்பமாகும்.

1941இல் ஜி. ஜி. பொன்னம்பலம் "ஐம்பதுக்கு ஐம்பது" கேட்ட காலத்திலேயே, தாம் சிறுபான்மையினராக இருந்தாலும், பெரும்பான்மையினரான சிங்களவருக்குச் சுயநிர்ணய உரிமை இருப்பது போலவே, தமக்கும் அந்த உரிமை உண்டு என்று தமிழர்கள் உணரத் தொடங்கி விட்டனர்.

தாம் உரிமைகளுடனும், சமத்துவத்துடனும் வாழ வேண்டும் என்ற உணர்வு ஐம்பது வருடங்களுக்கு முன்னரே தமிழர்களுக்கு உதித்தது ஆயினும் வாழ்வுரிமையையே இழந்துவிட்ட இழிநிலையைத் தான் அவர்களால் அடைய முடிந்தது தமது சொந்த மண்ணில், பிறந்த பிரதேசத்திலேயே வீடுவாசல்களை இழந்து, உயிர், உடைமைகளைப் பறிகொடுத்து உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி அகதிகள் என்ற இடுகுறிப் பெயருடன் வெறுந்தரைகளிலே படுத்துறங்கி வாழ்க்கையை ஓட்ட வேண்டியுள்ளது.

இத்தனைக்கும் சிங்களவர்களின் அடக்குமுறை அநீதி மட்டும் தான் காரணம் என்று சொல்ல முடியாது. தமிழர்களிடையே, குறிப்பாகத் தமிழ்த் தலைவர்களிடையே நிலவிய ஒற்றுமையின்மையும் பிரதான காரணம் ஆகும்.

தாம் சுதந்திரம் உள்ளவர்களாக, உரிமை உடையவர்களாக வாழ வேண்டும் என்ற உணர்வு கிளர்ந்திருந்த, மலர்ந்திருந்த போதிலும் தமிழ்த் தலைவர்களால் ஒரே குரலில் பேச முடியவில்லை. ஒற்றுமையாக இயங்க முடியவில்லை. ஒவ்வொருவரும் தாம் நினைத்ததே சரி என்றும், தாம் சொல்வதே உரிய மார்க்கம் என்றும், தமது செயற்பாடே வெற்றி அளிக்கக் கூடியது என்றும் விடாப்பிடியாக நின்று மக்களையும் பிளவுறச் செய்தார்கள்.

எண்ணம், சொல், செயல் ஆகியவற்றில் வாய்மையைக் கடைப்பிடிக்கத் தவறினார்கள். வாய்மை அற்றுப் போனதால் ஒற்றுமையை நிலைநாட்ட முடியவில்லை. அந்த ஒற்றுமையின்மையைப் பயன்படுத்தி ஆட்சியாளர்கள் தாம் சாதுரியமாகவும், சமயோசிதமாகவும், தந்திரமாகவும், சூழ்ச்சிகரமாகவும் செயற்பட்டு தமிழர்களைத் தோற்கடித்தார்கள்.

இப்போதும் கூட, தமிழர்களின் ஒற்றுமையின்மையே அவர்களுக்கு முதல் எதிரியாக, சாபக்கேடாக விளங்குகின்றது. தலைவர்களிடையே ஒற்றுமை வளர்வதற்கு உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசாத வாய்மை மிகமிக அவசியம். ஏன் மக்கள் கூட உள்ளே ஒன்றும் பெயருக்கு வெளியே இன்னொன்றுமாக நடிக்கிறார்கள். சந்தர்ப்பத்திற்கு ஏற்றாற்போல, கிட்ட இருப்பவர் யார் எனப் பார்த்துத் தங்கள் கொள்கைகளை மாற்றிக் கொள்கிறார்கள். தாம் வசதியாக வாழ்ந்தால் போதும் போராட்டம் அவசியமற்றது என்று கருதுவோர் கூட இருக்கிறார்கள். இவர்கள் எதிர்காலச் சந்ததியினர் நலனில் அக்கறை இல்லாத சுயநலமிகள்.

பொதுவாகத் தமிழர்கள் சிறு விடயத்திற்கும் ஒற்றுமை காண முடியாதவர்கள். பொது நலன் கருதிய கருத்துடன் பாட்டுக்கு வருவதை விட சுயநலம் நாடிய கருத்து வேற்றுமையையே நிலைநாட்ட முயற்சிப்பவர்கள். இந்தப் பொல்லாத குணாம்சம் மாறும்வரை, தமிழர்கள் சுதந்திரம் பெறுவது என்பது கல்லில் நார் உரிக்கும் கஷ்டமான பணியாகவே இருக்கப்போகிறது!

# பிரேமா அரசாங்கத்தில் ஒஸிக்கு பிரதமர் பதவி?

## ஐ. தே. க. வட்டாரங்களில் அதிருப்தி

கொழும்பு, செப். 8

ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் ஒரு குழுவுக்குத் தலைமை வகிக்கும் ஒஸி அபயகுணசேகராவுக்கு தாம் கலந்து கொள்ளும் கூட்டங்களில் ஜனாதிபதி பிரேமதாஸா கொடுத்துவரும் முக்கியத்துவம், ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் உயர் வட்டாரங்களில் மன எரிச்சலைக் கொடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சென்ற மூன்றாம் திகதி கொழும்பு சபையர் ஹோட்டலில் நடந்த திருமண நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலர் அங்கு இது குறித்துப் பேசிக் கொண்டனர்.

அத்திருமண நிகழ்ச்சியில் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் கலந்து கொண்டார் என்றும் 'சண்டே ரைம்ஸ்' தகவல் வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தல்வழக்கில் திரு. பிரேமதாஸா வெற்றியீட்டியதைத் தொடர்ந்து அவரைச் சென்று பாராட்டியவர்களில் ஒஸி அபயகுணசேகரா முக்கியமானவர் என்றும் —

ஐ. தே. க. வட்டாரத்தில் ஒஸிக்கு வளர்ந்துவரும் செல்வாக்கு குறித்து அக்கட்சியின் முக்கியஸ்தர்கள் கவலை தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி பிரேமதாஸா அரசில் தான் பிரதம மந்திரியாக வரமுடியும் என்று திரு. ஒஸி அபயகுணசேகரா தமது கட்சியினரிடம் தெரிவித்திருப்பதாகக் கூறப்படுவது ஐ. தே. கட்சியினரை இன்னும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது என்றும் சொல்லப்படுகின்றது.

ஒஸியின் இக் கூற்று ஐ. தே. கவின் ஸ்திரத் தன்மையை குலைக்கக் கூடியது என்றும் அக்கட்சிப் பிரமுகர்கள் கருதுகின்றனராம்.

ஜனாதிபதி தாம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் கூட்டங்களில் ஒஸியைப் பேசவைப்பதும், பின்னர் அவரைப் புகழ்ந்து பேசுவதும் ஐக்கிய தேசியக் கட்சிப் பிரமுகர்களை அதிருப்தி கொள்ளச் செய்துள்ளது என்றும் —

அப்படியானவர்களில் ஒருவர் விளையாட்டுத்துறை அமைச்சர் நந்தா மதியூ என்றும் தெரிவிக்கப்படுகிறது.

நந்தா மதியூ பிரதிநிதித்துவப்படுத்தும் இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள கொலன்ன நகரில் நடந்த கூட்டம் ஒன்றில் —

"இப்பகுதி மக்கள் வரட்சி காரணமாக அடைந்துள்ள இன்னல்கள் குறித்து ஒஸி அபயகுணசேகரா எனது கவனத்துக்குக் கொண்டுவந்தார். குறைபாடுகளை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும்" — என்று ஜனாதிபதி பிரேமதாஸா பேசியிருந்தார்.

அக்கூட்டத்தில் கலந்துகொண்ட நந்தா மதியூ அன்றிரவு நடந்த விருந்து ஒன்றில், ஜனாதிபதியின் இப் பேச்சுக் குறித்து தமது நெருங்கிய சகாக்களிடம் கவலை தெரிவித்தார். இரத்தினபுரி மாவட்டத்தில் 'ஒஸி'க்கு என்ன அந்தஸ்து உள்ளது என்றும் அவர் கேட்டார். (உ-எ)

## மாவீரர்கள் அஞ்சலிக் கூட்டம்

வடமராட்சி, செப். 8

மயிலிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த — தமிழீழ மண்ணை மீட்க போராடி வீரமரணமடைந்த 37 மாவீரர்களின் நினைவஞ்சலிக் கூட்டம் கடந்த சனிக்கிழமை பருத்தித்துறையில் நடைபெற்றது.

மாவீரர்களுக்கான தீபச்சுடரை வலிகாமம் கடற்புலி அரசியல் பொறுப்பாளர் திரு. சந்துரு ஏற்றி வைத்தார். மாவீரர்களின் படங்களுக்கு பெற்றோர், உறவினர் மலர் இட்டு அஞ்சலி செலுத்தினர்.

37 மாவீரர்களுக்கான விருதுகளை தமிழீழ கடற்புலிகள் தளபதி திரு. சூசை கடற்புலிகள் தளபதி திரு. கங்கை அமரன் ஆகியோர் வழங்கினர். (த-165)

## பிரேமா தன்னுடன் ஒஸியை எங்கும் கூட்டி செல்வதேன்?

கொழும்பு, செப். 8

ஒஸி அபயகுணசேகராவை ஜனாதிபதி பிரேமதாஸா தாம் போகும் இடம் எல்லாம் கூட்டிச்சென்று பேசவைப்பதன் மர்மம் என்ன என்பது குறித்து "சண்டே ரைம்ஸ்" சில தகவல்களை வெளியிட்டுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியில் முன்னணிப் பேச்சாளர்களாக கருதப்படக்கூடியவர்கள் எவரும் இல்லை.

1988 ஜனாதிபதித் தேர்தலிலும் பின்னர் நடந்த பொதுத் தேர்தலிலும் திரு. பிரேமதாஸாவுக்கு ஆதரவாக ரஞ்சன் விஜேரத்னா, லலித் அத்துலத்முதலி, காமினிதிஸநாயக்கா, ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ், ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் முன்னணிப் பேச்சாளராக இருந்தனர்.

ரஞ்சன் இறந்து விட்டார். லலித்தும் காமினியும் புதிய கட்சி தொடங்கியுள்ளனர். இதனால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பவே 'ஒஸி'யைப் பிரேமதாஸா பயன்படுத்துகின்றார்.

ஜனாதிபதி தாம் கலந்து கொள்ளும் பொதுக்கூட்டங்களில் சுதந்திரக்கட்சியைத் தாக்கிப் பேசும் பொறுப்பை 'ஒஸி'யிடம் ஒப்படைத்துள்ளதாகவும் —

லலித் - காமினி கட்சியைத் தாக்கிப் பேசுவதைத் தாம் ஏற்றுள்ளார் என்றும் 'சண்டே ரைம்ஸ்' தெரிவிக்கின்றது.

ஒஸி ஏற்கனவே ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்தவர். 1970களில் அக்கட்சியில் இருந்து, அப்போதைய தலைவர் ஜெயவர்த்தனாவை வெளியேற்ற முயற்சித்தவர் அவர். இறுதியில் ஒஸி ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டார். பின்னர் சுதந்திரக்கட்சியில் சேர்ந்த அவர், அங்கு இருந்து விஜய குமாரணதுங்காவுடன் வெளியேறி, ஸ்ரீலங்கா மக்கள் கட்சியை ஸ்தாபித்தார்.

## ஐ. தே. க. வட்டாரங்களில் லலித் கட்சிக்கு செல்வாக்கு!

கொழும்பு, செப். 8

புதிதாக லலித் - காமினி குழுவினர் ஸ்தாபித்துள்ள ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் அரசியல் செல்வாக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவு வட்டாரங்களில் பலமாக ஊடுருவல் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தேசிய உளவுப் பணியகத்தின் "எம்" கிளைக்குக் கிடைத்த தகவல்களில் இருந்து இது தெரியவருவதாகவும் 'சண்டே ரைம்ஸ்' தகவல் வெளியிட்டுள்ளது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் படோடபம் குறைந்த பிரசாரம், விரும்பிய அளவு பலன் அளிக்கத் தொடங்கியிருப்பதாகவும், ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவு வட்டத்தினுள் அதன் செல்வாக்கு படிப்படியாக ஊடுருவி வருவதாகவும் கூறப்படுகிறது.

இதன்காரணமாகத்தான் ஜனாதிபதி பிரேமதாஸா ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி மீதான தாக்குதலைத் தீவிரப்படுத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## நரிமலைப் பகுதியில் குழி தோண்ட முயற்சி

### இயந்திரம் அபாய சமிக்ஞை

கொழும்பு, செப். 8

தியத்தலாவை நரிமலையில் புகை கிளம்பும் பகுதியில் பெரும் குழி ஒன்றைத் தோண்டுவதற்கு கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட முயற்சி கைகூடவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

குழி தோண்டுவதற்காக இயந்திரம் ஒன்றை அப் பகுதிக்கு எடுத்துச் சென்ற போது குறிப்பிட்ட இடத்துக்கு சில நூறு யார் தூரத்தில் வைத்தே அந்த இயந்திரம் அபாய சமிக்ஞையை எழுப்பியதாம்.

இதனை அடுத்து அந்த இயந்திரத்தை அங்கு கொண்டு போகும் முயற்சி கைவிடப்பட்டது.

அதே சமயம் புகை கிளம்பும் பகுதியில் பொதுமக்களின் நடமாட்டம் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. புகை கிளம்பும் இடத்தை [illegible] பகுதியில் மக்கள் அமைதிக் [illegible] (இ)

### துர்க்கையம்மனை...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றுய்வர். "என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே" என்று ஒவ்வொரு அடியாரின் அகமும் ஆடிப்பாடி ஆனந்திக்கும்.

அம்பிகையைச் சரணடைந்து அதி[illegible] வோம். வாரு[illegible] கையை துதித்[illegible] ளிப்போம்!

★

## மர்மமான முறையில் உயிரிழந்த 'குடு'ராஜாவின் மனைவி நீதிமன்றில் வைத்து கொலை!

### கொழும்பில் நேற்றுச் சம்பவம்

கொழும்பு, செப். 8

'குடு'ராஜா என்றழைக்கப்படும் பிரபல போதைப் பொருள்வியாபாரியான சிதம்பரம் தர்மராஜா சில தினங்களுக்கு முன்னர் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டதை அடுத்து கைது செய்யப்பட்ட அவரது மனைவி நேற்று கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றம் ஒன்றில் வைத்து பலர் முன்னிலையில் கும்பல் ஒன்றினால் குத்திக் கொலை செய்யப்பட்டார்.

கொழும்பு கொம்பனித் தெருவைச் சேர்ந்த பெரிய பணக்காரரான 'குடு'ராஜா நடுச்சாம வேளையில் காரில் வந்து வீட்டில் இறங்கினார் என்றும் —

அதன் பின்னர் ஆடம்பரமான தனது வீட்டின் முன் மண்டபத்தில் அவர் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடக்கக் காணப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

'குடு'ராஜாவைக் கொலை செய்தனர் என்ற சந்தேகத்தின் பேரில் அவரின் மனைவியான சந்திரிகாவும் (வயது 29) மற்றும் சந்திரிகாவின் கள்ளக் காதலன் என்று கருதப்படும் ஒருவரும் கைது செய்யப்பட்டு நேற்று கொழும்பு நீதிமன்றம் ஒன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

சந்திரிகா நேற்று நீதிமன்றத்தில் நின்றுகொண்டிருந்த போது பார்வையாளர் பகுதியில் இருந்த கும்பல் ஒன்று கிளர்ந்தெழுந்து சந்திரிகாவைக் கத்தியால் குத்திப் படுகொலை செய்துவிட்டு தப்பிச் சென்றது என்று ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன. (உ-எ)

## எதிர்க் கட்சிக் கூட்டணியின் மனித சங்கிலிப் போராட்டம்

கொழும்பு, செப். 8

எதிர்க்கட்சிகளின் கூட்டணி ஒழுங்கு செய்துள்ள கொழும்புக்கும் இரத்தினபுரிக்கும் இடையிலான மனிதசங்கிலிப் போராட்டம் எதிர்வரும் அக்டோபர் மாதம் பத்தாம் திகதி ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இப்போராட்டம் மூன்று கட்டங்களாக நடத்தப்படும் என்று சுதந்திரக்கட்சி எம்பியான மஹிந்தா ராஜபக்ஷ தெரிவித்தார்.

முதல் கட்டமாக கோட்டேக்கும் மீப்பேக்கும் இடையே மனித சங்கிலிப் போராட்டம் நடைபெறும். இரண்டாம் கட்டப் போராட்டம் மீப்பேக்கும் எஹலிய கொடைக்கு இடையிலும் —

இறுதிக் கட்டப் போராட்டம் எஹலிய கொடைக்கும் இரத்தினபுரிக்கும் இடையிலும் நடைபெறும் என்றும் அவர் கூறினார். (த-எ)

## தரம் கெட்டுச் செல்லும் அரசியல் பிரசாரங்கள்!

கொழும்பு, செப். 8

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிரான ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசார நடவடிக்கைகள் இப்போது தரம் கெட்டுச் செல்வதாக கொழும்பு பத்திரிகையாளர் வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

அரசு சார்புப் பத்திரிகைகளான — லேக் ஹவுஸ் வெளியீடுகள் — முற்றிலும் ஐ. தே. கட்சிப் பத்திரிகை போல் பிரசுரமாகின்றன. அவை தேசியப் பத்திரிகைகள் என்ற நிலையை விட்டு கட்சிப் பத்திரிகைகளாகத் தரமிறங்கி வருகின்றன.

நேற்று முன்தினம் வெளியான ஞாயிறு வார இதழ்களில் — சிலுமின (சிங்களம்), தினகரன் (தமிழ்), சண்டே ஒப்சேவர் (ஆங்கிலம்) ஆகியவற்றின் முன்பக்கங்களில் —

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா விருந்து ஒன்றில் மேல்நாட்டு குடிவகை ஒன்றை ஷம்பெய்ன் கிளாஸில் குடித்துக்கொண்டிருக்கும் வர்ணப் படமும் —

அவரது மகனான அநுரா பண்டாரநாயக்கா வைன் ஊற்றப்பட்ட கிளாஸ் தனக்கு முன்னால் மேசையில் இருக்க நீண்ட ஹவாய் சிகரெட்டைப் புகைத்துக்கொண்டிருக்கும் மற்றொரு வர்ணப் படமும் பிரசுரமாகியிருந்தன.

திருமதி பண்டாரநாயக்கா குடிவகைகளை விரும்பிக் குடிக்கும் மதுப்பிரியர் என்று காட்டுவது போல — விருந்து மேசையில் பல கண்ணாடி கிளாஸுகளுக்கு மத்தியில் அவர் கவலையுடன் காணப்படுவது போன்ற 'குளோஸ்—அப்' வர்ணப்படத்தை அரசுப் பத்திரிகைகள் பிரசுரித்திருப்பது, கீழ்மட்டப் பிரசார உத்தி எனக் கூறப்படுகிறது.

ஆங்கில வாரப் பத்திரிகையில் சிறிமாவின் படத்துக்குக் கீழ் "இந்தப் பொங்கும் நுரை மீண்டும் உற்சாகம் பெற உதவுமா? அல்லது வைனின் சுவையும் றோஸ் மலரின் நறுமணமும் முடிவுக்கு வரும் நாள் எந்நாளோ? எனச் சிந்திக்கிறாரா? அல்லது அவிகிரிய, மல்வத்தை பீடங்களின் மகாநாயக்கர்களின் ஆலோசனையை ஏற்று இவற்றையெல்லாம் துச்சமென நினைப்பாரா?" என்று — அடிக்குறிப்பு எழுதப்பட்டுள்ளது.

அதேபோன்று அநுராவின் படத்துக்குக் கீழ் "எதிர்காலம் இப்படித்தான் இருக்குமோ? வைனும் பாடலும் ஹவானா சுருட்டுமாக ...?" என்று அடிக் குறிப்பு பிரசுரமாகியிருந்தது.

### ஜனாதிபதியின் பிரசாரமும்...

இதேவேளை —

நாட்டின் தலைவரான ஜனாதிபதி பிரேமதாஸா கூட, தனது பொதுக்கூட்ட உரைகளை, தமது ஆரம்ப கால அரசியல் பாணியில் இப்போது நடத்துவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உதாரணத்துக்கு அநுராதபுர மாவட்ட ஐ. தே. க. மாநாட்டில் அவர் நிகழ்த்திய உரையின் ஒரு பகுதி பின்வருமாறு அமைந்திருக்கிறது:-

மாமா மாமி கட்சிகளைச் சேர்ந்த ஒரு சில குடும்பங்களே இது நாள் வரை மக்களின் சொத்துக்களைச் சூறையாடி வந்தனர்.

இந்தக் குடும்பங்கள் அரசியல் ரீதியாகப் பிளவுபட்டு

[8 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் உற்சவகாலத்தில்

# தவறவிட்ட பொருள்களை உரியவர்கள் பெறலாம்

யாழ்ப்பாணம், செப். 8 நல்லூர் உற்சவ காலத்தில் அடியார்களால் தவறவிடப்பட்டு மீளப்பெறப்படாத நகைகள், கைக்கடிகாரங்கள், பணப்பைகள், சைக்கிள் திறப்புகள் என்பனவற்றை தமிழீழக் காவல்துறையிடம் இப்போது பெற்றுக் கொள்ளலாம்.

தமது பொருள்களைத் தவறவிட்ட அடியார்கள் பலர், காவல்துறையின் உற்சவ காலப் பணிமனைக்குச் சென்று காவல்துறையின் உதவியுடன் அவற்றை மீளப் பெற்றுள்ளனர்.

மீளப்பெறாமல் இருக்கும் எஞ்சிய பொருள்களை உரியவர்கள் தமிழீழக் காவல்துறையின் குற்றப் புலனாய்வுப் பிரிவிற்கு சமுகம் தந்து பெற்றுக் கொள்ளுமாறு காவல்துறைப் பொறுப்பாளர் திரு. ஈ. நடேசன் கேட்டுள்ளார். [உ]

# நாளைய பேரணி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி) வழங்குமாறு ஜனாதிபதியைக் கோரும் மகஜர் யாழ் அரச அதிபரின் பிரதிநிதியிடம் கையளிக்கப்படும். செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பிரதிநிதியிடமும் மகஜர் கையளிக்கப்படும்.

ஆர்ப்பாட்டப் பேரணி சம்பந்தமாக ஆராய்ந்து ஏற்ற ஒழுங்குகளைச் செய்வதற்கான ஆலோசனைக் கூட்டம் நேற்றுக்காலை நடைபெற்ற போது இந்த முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

தமிழீழ வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் திரு. கு. கிறில் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பல அமைப்புகள், தொழிற்சங்கங்கள், சமூக நல இயக்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### பேரணி

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட மக்கள் நாளை காலை 10 மணிக்கு முன்பாக யாழ். செயலகத்துக்குச் சென்று செயலக வாசலில் மறியல் செய்வர்.

தீவக மக்கள் யாழ். நகர சத்திரச் சந்தியிலிருந்து பருத்தித்துறை வீதி வழியாக நல்லூர் ஆலயத்தைச் சென்றடைவர்.

வலிகாமம் மக்கள் காங்கேசன்துறை வீதி வழியாக கொக்குவில் இந்துக் கல்லூரியை அடைந்து பின்னர் நாவலர் வீதி வழியாக நல்லூர் ஆலயத்தைச் சென்றடைவர்.

வடமராட்சி மக்கள் நீர்வேலி, கோப்பாய், பருத்தித்துறை வீதி வழியாக நல்லூரைச் சென்றடைவர்.

தென்மராட்சி மக்கள் செம்மணிவீதிக்கு வந்து அங்கிருந்து தபால் கட்டைச் சந்தியை அடைந்து கண்டி வீதி மற்றும் நாவலர் வீதி, கோவில் வீதி ஆகியவை ஊடாக நல்லூர் ஆலயத்தை அடைவர்.

நல்லூர் வீதியில் திரளும் பல்லாயிரக்கணக்கான மக்கள் சுலோகங்கள் பதாகைகள் தாங்கிய வண்ணம் கோவில் வீதி வழியாக காலை 10 மணிக்கு பேரணியை ஆரம்பிப்பர்.

முதலில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பிரதிநிதியிடம் அவர்களின் அலுவலகத்தில் வைத்து மகஜர் கையளிக்கப்படும். அங்கிருந்து பேரணி பின்னர் செயலகம் செல்லும். அங்கு ஜனாதிபதிக்குரிய மகஜர் யாழ் அரச அதிபரின் பிரதிநிதியிடம் கையளிக்கப்படும்.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் தனியார், அரச, கூட்டுத்தாபன, வர்த்தக நிலையங்களைச் சேர்ந்த ஊழியர்களும் —

சனசமூக நிலையங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள் போன்ற பொது ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்களும் கலந்து கொள்வர். [அ-17-162]

## தரம் கெட்டுச்...

[7 ஆம் பக்கத் தொடர்ச்சி] ருந்த போதிலும் இரவானதும் இவர்கள் ஒன்றிணைந்து, ஒருவர் மற்றவரின் மனைவியுடன் நடனமாடினர். அவரின் மனைவியைக் கட்டியணைத்த இவரும், இவரின் மனைவியைக் கட்டியணைத்த அவரும் ஆடிக் குதூகலித்தனர்.

இவர்கள்தான் இன்று நான் தேசிய வளத்தைச் சூறையாட விடுகிறேன் இல்லை என்று ஆத்திரமடைகின்றனர். தாம் தொடர்ந்தும் சூறையாடக் கூடிய சூழ்நிலையை உருவாக்குவதற்காக என்னை இல்லாமல் செய்துவிட முனைகின்றனர். — என்றார். [உ-த-10]

## மரண அறிவித்தல்கள்

### K. K. வேலுப்பிள்ளை

காரைநகர் சிவன் கோவில் வீதியில் வசித்தவரும், கொழும்பு 74, செட்டியார் தெரு, லிப்ரா ஜுவலரி ஸ்ரோர்ஸ் உரிமையாளருமான K. K. வேலுப்பிள்ளை நேற்றுமுன்தினம் கொழும்பில் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற பாறுவதியின் அன்புக் கணவரும், சரோஜினிதேவி, விமலாதேவி, செல்வராணி, கமலாம்பிகை, தனலட்சுமி, இராஜேஸ்வரி, தேவராஜா, ஆகியோரின் அன்புத் தந்தையாரும், செல்வராசா சண்முகரத்தினம், பாலேந்திரா, ஜெயகிருஷ்ணானந்தசிங், கந்தசாமி, குகதாசன், யோகரஞ்சினி ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் எதிர்வரும் 10-09-92 வியாழக்கிழமை கொழும்பில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி ப. கனகசபாபதி

[22478]

### அருளம்பலம் தம்பிமுத்து

நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கொழும்பில் கணக்காளராகப் பணியாற்றியவருமாகிய அருளம்பலம் தம்பிமுத்து அவர்கள் (02-09-92) கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற தனலட்சுமியின் அன்புக் கணவரும், ரவிக்குமார், இந்திராணி, ரஞ்சலிங்கம் (கணக்காளர், கொழும்பு), கணேசலிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், புனிதநாதன், கமலாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரதீப்குமார், திலீப்குமார், சுஜீப்குமார், கிஷோப்குமார், தர்சினா, சுதர்சன், சஜந்தன், துர்க்காயினி ஆகியோரின் அன்புப் பேரனாருமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் (03-09-92) மாலை கொழும்பில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஆ. முத்துக்குமாரு
(முத்துவேலு)

36/20, பிரம்படி லேன்,
கொக்குவில்.

(22458)

### திருமதி தவமணி சிவகுருநாதன்

யாழ் அத்தியடி, அம்பலவாணர் வீதியைச் சேர்ந்த திருமதி தவமணி சிவகுருநாதன் அவர்கள் 6-9 92 அதிகாலை சிவபதம் அடைந்தார்.

இவர் காலஞ்சென்ற கரந்தன் சிவகுரு—செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், A. R. சிவகுருநாதன் அவர்களின் அன்பு மனைவியும், சிரஞ்சினி, மனோகரி (யாழ் தொலைத்தொடர்புத் திணைக்களம்), கிரிதரன் (U.K), பகிரதன், சாந்தினி (பரந்தன்), சங்கரி (U.K), சுபேந்தினி (U.K) ஆகியோரின் அன்புத் தாயாரும், சதாசிவம், பாலசிங்கம் (பரந்தன்), இளஞ்சேய் (U.K), பேரானந்தன் (U.K), நிலாந்தி, அனுஷா ஆகியோரின் அன்பு மாமியாரும், பரமேஸ்வரி, பரமலிங்கம், இராஜேஸ்வரி, தனேஸ்வரி, ஞானேஸ்வரி, ஞானேஸ்வரன் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று காலை 10 30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
அ. இ. சிவகுருநாதன்
(கணவர்)

102, அம்பலவாணர் வீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம்.

[22474]

### திருமதி ஐயாத்துரை செல்லம்மா

திருமதி ஐயாத்துரை செல்லம்மா 7-9-92 அன்று காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற பொன்னையா ஐயாத்துரை (போசன் ஸ்ரோர்ஸ் திஸ்ஸமகாராம)யின் அன்பு மனைவியும் அமரர் ஆறுமுகம் சரஸ்வதிதேவி, கார்த்திகேசன் (வேலவன் ஸ்ரோர்ஸ் பருத்தித்துறை) தவகுகநேசன், பொன்னம்பலநாதன் (வேலவன் ஸ்ரோர்ஸ் பருத்தித்துறை), பாலவடிவேலன் (வேலவன் ஸ்ரோர்ஸ் பருத்தித்துறை) திருமதி கருணாராஜா தவதேவி, முருகானந்தன் (ஊற்று நிறுவனம் பருத்தித்துறை), சரவணபவான் (Baharin) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஆறுமுகம், கருணராஜா (State Engineering Corporation Ratmalana) யோகாதேவி, அன்னலட்சுமி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும், தஜீவ் சஞ்சீவ் ஹம்ஸிகா, லோஷிகா ஜகநந்தா, துஷ்யந்தினி அபத்தா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 7-9-92 அன்று மாலை 5.00 மணிக்கு ஆலங்கட்டை, இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

தகவல்:
ஐ. முருகானந்தன்
(மகன்)
வேலவன் ஸ்ரோர்ஸ்,
பருத்தித்துறை.

யார்வத்தை,
வதிரி, கரவெட்டி.

[22461]

## கைப்பற்றிய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி) பட்ட இந்த நவீன படகு அதி வேகமாக ஓடக் கூடியது.

கடற்படையினரின் பீரங்கிப் படகுகளோ அல்லது "டோரா" படகுகளோ இந்த "வோட்டர் ஜெட்" படகை வேகத்தில் நெருங்க முடியாது.

"வோட்டர் ஜெட்" படகை மற்றைய படகுகளைப் போன்று இலகுவில் இயக்கிவிட முடியாது. இதற்காக விசேட பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.

இப்படகைக் கைப்பற்றியவர்கள் இதனை எப்படிக் கொண்டு சென்றார்கள் என்பது வியப்பாக இருக்கிறது. இந்தப் படகு பற்றிய "கட்லொக்" ஒன்றை இவர்கள் ஏற்கனவே பெற்று அதன் அடிப்படையில் படகை இயக்கிச் சென்றிருக்கலாம்.

இப்படி இராணுவ அதிகாரிகள் தெரிவித்ததாக அப்பத்திரிகைச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது தென்னாட்டு மக்களுக்கு காட்சிக்கு வைக்கப்படடிருக்கும் இப் படகை புலிகள் எப்போது தாக்குதலுக்குப் பயன்படுத்தப் போகின்றார்களோ தெரியாது என்று உயர் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. [இ]

## 15 விமானப் படை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி) சபைக்குச் சொந்தமான படகு ஒன்றும் அடங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இத் திருட்டுத் தொடர்பாக மேல் விசாரணை நடத்துமாறு பொலீஸ் மா அதிபர் ஏர்னெஸ்ட் பெரேரா இரகசியப் பொலீஸாரைப் பணித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்தே வழக்குத் தொடரப்பட்டு ... [இ-எ-10]

## 60 ஆவது நாள் நினைவஞ்சலி

ஈன்றவள் மடியில்: 07 — 10 — 1971



ஈர்த்தவன் அடியில்: 11 — 07 — 1992

சம்பந்தன் மெடிக்கல் கிளினிக் உரிமையாளர் காலஞ்சென்ற டாக்டர் செல்வரட்ணம் அவர்களின் புதல்வன்

### ● சுதர்ஷன் ●

பிள்ளைப் பராயத்திலே பிஞ்சுமொழிகளாலெமமைப்
பித்தனாக்கிய பெருமகனே சுதர்ஷா — எம்
எண்ணச் சுவட்டினிலே எழில் வதனத்துடன்
தந்தையைப் போல் பெரு மருத்துவராய்
தரணியில் சேவை யாற்ற வருவாயென்று
பெருமையுடன் காத்திருந்தோம் உன் னெழிலைப்
பார்த்திருந்தோம்
உரிமையுடன் உன்னுயிரை உரியவன் பறித்தெடுத்து
பாரினிலே எம்மைப் பரிதவிக்கத் துடிதுடிக்க
பார்வையாலே நீ ஜாலம் காட்டி
ஓடோடித் தொலை தூரம் சென்றதெங்கே!

கல்வியினு ந்தலினால் உயர் நோக்காய்
அன்னையோ டிணைந்து நீயும்
இந்திய மண்ணில் கால் பதித்த
ஈன்றவள் பெரிதுவக்கு முன்னே
பந்தங்களை, சொந்தங்களைப் பற்றுக்களை
விட்டெ றிந்து எத்தனை காத தூரம்
எட்டாக் கனியாய் எட்டவே சென்றுவிட்டாய்

இல்லையொரு ஆண்பிள்ளையென்று நேற்றுவரைப் -
— பெற்றெடுக்கத்
தொல்லையினி உலகினிலென்று நொந்தாயோ
துரதிஷ்ட வசமாக ஈழஎல் லையைக் கடந்தாயே
துரத்தி விட்டான் காலன் உன்னை
நற்றாய் மறந்து உடன் பிறப்பை
உற்றாரைக் கைவிட்டு உலகை வெறுத்து
தந்தையின் அடியொற்றி நீ சென்ற போது
உலகை யுற்ற எம் மனம் ஊனமாய்ப் போனதடா
தரணியில் நாம் தவிதவிக்க
தாராள மனத்துடன் எம்மைத்
தனியாய் விட்டுச் சென்றாயோ மகனே!

5/3, பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி

அன்னை, அக்கா சுகன்யா,
உற்றார், உறவினர்.

[22475]

## மரண அறிவித்தல்

### திருமதி மாரிமுத்து கைலாசபிள்ளை

திருநெல்வேலி பத்திரகாளி கோவிலடியைச் சேர்ந்த திருமதி மாரிமுத்து கைலாசபிள்ளை நேற்றுத் திங்கட்கிழமை மாலையிற் காலமானார். அன்னார் காலஞ்சென்ற சிவகுரு கைலாசபிள்ளையின் அருமை மனைவியும், அராலி காலஞ்சென்ற கார்த்திகேசு - தையல்முத்து தம்பதியரின் மூத்த புதல்வியும், திருவாளர்கள் விஸ்வலிங்கம், கனகரத்தினம், பொன்னுத்துரை (பொறியியலாளர், ஓமான்), கணேசலிங்கம், திருமதிகள் பராசக்தி, சரஸ்வதி (ஓய்வுபெற்ற ஆசிரியை, வேம்படி மகளிர் கல்லூரி), சொற்கொடி, இராஜபாக்கியம் ஆகியோரின் அருமைத் தாயாரும் சுப்பிரமணியம் வேலாயுதம் (Agrarian Services Colombo), காலஞ்சென்ற சே. ஆ. கந்தசாமி, சங்கானை திருநாவுக்கரசு, காலஞ்சென்ற தங்கரத்தினம், கனகமணி, கனகாம்பிகை (ஓமான்), சாந்தினி ஆகியோரின் அருமை மாமியாரும், காலஞ்சென்ற நல்லதம்பி இல்லாலை - சண்முகம், சங்கானை - வடிவேல், அராலி - பரஞ்சோதி சிவசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), திருமதிகள் வள்ளியம்மை, நாகலட்சுமி (மணி) ஆகியோரின் அருமைச் சகோதரியும், துரையப்பா, காலஞ்சென்ற சண்முகம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார். மரணச் சடங்குகள் இன்று செவ்வாய்க்கிழமை (08-09-92) பிற்பகல் 2மணியளவில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கை. விஸ்வலிங்கம்

'கயிலை'
அம்மன் வீதி,
திருநெல்வேலி கிழக்கு.

(22479)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 08-09-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org